






# விஸ்வரூப தரிசனம்












ஆக்கியோன்
கலாபூஷணம் - ஞானசிரோமணி
பண்டிதர் இ. வடிவேல்
திருக்கோணமலை

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
வெளியீடு
07-04-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40.00

# விஸ்வரூப தரிசனம்

ஆக்கியோன்
கலாபூசணம் - ஞானசிரோமணி
பண்டிதர் இ.வடிவேல்
திருக்கோணமலை.

ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
வெளியீடு
07.04.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| **நூல்** | **:-** | விஸ்வரூப தரிசனம் |
| **ஆசிரியர்** | **:-** | கலாபூசணம் ஞானசிரோமணி<br>பண்டிதர் இ. வடிவேல் |
| **முகவரி** | **:-** | 15, வித்தியாலயம் ஒழுங்கை,<br>திருக்கோணமலை. |
| **பதிப்புரிமை** | **:-** | ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்<br>தேவஸ்தானம்<br>**026-22760** |
| **பதிப்பு** | **:-** | 07-04-2003 |
| **பக்கம்** | **:-** | **72** |
| **அச்சுப்பதிப்பு** | **:-** | ரெயின்போ மினிலாப்<br>(பிறைவேற்) லிமிற்ரேட்,<br>திருக்கோணமலை. |
| **பிரதி** | **:-** | **1000** |
| **விலை** | **:-** | **ரூபா 40.00** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| உசாத்துணை நூல்கள் | 04 |
| அணிந்துரை | 05 |
| வாழ்த்துரை | 06 |
| எனதுரை | 09 |
| கணேச விஸ்வரூபம் | 11 |
| முருக விஸ்வரூபம் | 17 |
| சிவ விஸ்வரூபம் | 23 |
| சக்தி விஸ்வரூபம் | 29 |
| கிருஷ்ண விஸ்வரூபம் | 37 |
| பசு விஸ்வரூபம் | 44 |
| மனித விஸ்வரூபம் | 49 |
| அணு விஸ்வரூபம் | 56 |
| நிறைவுரை | 69 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்

1. ஸ்ரீமத் பகவத்கீதை
2. கந்தபுராணம் - சூரபத்மன் வதைப்படலம்
3. கந்தபுராணம் - அடிமுடி தேடிய படலம்
4. தேவி பாகவதம்
5. தேவி மகாத்மியம்
6. விநாயகர் புராணம்
7. விஷ்ணு தர்மோத்தர புராணம்
8. அபிதான சிந்தாமணி
9. திருவாசகம் - திருவண்டப் பகுதி
10. தாயுமானவ சுவாமிகள் பாடல்
11. பிரபஞ்சமர்மம்,
    உண்மையைக் காட்டும் காலக் கண்ணாடி
    -வைத்திய கலாநிதி ஆ.விசாகரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா வேதாகமமாமணி**

**பிரம்மஸ்ரீ. சோ. இரவிச்சந்திரக் குருக்கள் அவர்கள்**

விஸ்வரூப தரிசனம் என்னும் இந்த நூலில் எட்டு விஸ்வ ரூபங்களை நூலாசிரியர் எடுத்துக் கூறியுள்ளார்.

விஸ்வம் என்பது பிரபஞ்சம். தரிசனம் என்பது காட்சி. இறைவனின் அடங்காற்றலாலும், இறைவியின் இயங்காறலாலும் இப் பிரபஞ்சம் படைக்கப்பட்டிருப்பதை வேத ஆகம சாஸ்திரங்கள் விளக்கியுள்ளன.

கிருஷ்ண, முருக, சிவ, சக்தி, கணேச விஸ்வ ரூபங்களை தெய்வ விஸ்வ ரூபங்களாயும், மனித விஸ்வரூபம் மனிதனின் தீய குணங்களால் ஏற்படுவதால் அதை மானிட விஸ்வரூபமாயும், மிருகங்களில் பசு கோமாதா எனப் பூஜிக்கப்படுவதால் பசு விசுவரூபத்தை மிருக விஸ்வ ரூபமாகவும், மெய்ஞானிகள் அகக் காட்சியில் கண்டறிந்த பிரபஞ்ச மர்மத்தை விஞ்ஞானிகள் பௌதிக ரீதியாக புறக் காட்சியில் காண முற்படுவதை அணு விஸ்வரூபமாகவும் பகுத்து நூலாசிரியர் விளக்கம் தந்துள்ளார்.

மண்ணில் நல்ல வண்ணம் மக்கள் வாழ்வதற்கு அகவாழ்வும், புறவாழ்வும் தூய்மையாக அமைய வேண்டும். இதற்கு ஞானமும் கல்வியும் இன்றியமையாதது. இளைஞர் முதல் முதியவர் வரை அனைவரும் இந்நூலில் கூறப்பட்டுள்ள விஷயங்களை நற் சிந்தனையோடு படிக்கும்போது மனித விழுமியங்களையும், மானிட நேயத்தையும் அறியக் கூடியதாக இருக்கும். அதனால் தெய்வ பக்தியும் ஒழுக்க சீலமும் மனிதனை மண்ணில் நல்ல வண்ணம் வாழச் செய்யும்.

இச் சிறு நூலில் கூறப்பட்டுள்ள அரிய கருத்துக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தினால் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வெளியீடாக இந் நூல் வெளியிடப்படுகின்றது. நூல் சிறியதாயினும் நூலாசிரியரின் முயற்சி பெரியது. ஆதலால் நூலைப் படைத்தவராகிய ஞான சிரோமணி, பண்டிதர்-இ.வடிவேல் அவர்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

| | |
|---|---|
| **ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்** | **வேதாகமமாமணி** |
| **திருக்கோணமலை** | **சோ. இரவிச்சந்திரக்குருக்கள்** |
| **07.04.2003** | **ஆதீன கர்த்தா.** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டுப் பேருருவின் காட்சி!

**(வாழ்த்துரை)**

1. இரு வேறுபட்டதல்ல
இன்ப துன்பங்கள் - ஆயின்
ஒரு மூலத் திருப்பாற் காட்சி,
உயர் நாணயத்தைப் போல!
வருமிராப் பகலை நாளும்
வரவேற்கும் நிலைமை போன்றே
திருமாற்பேருருவந் தன்னைத்
தெரிந்தனன் களக்காண்டீபன்!

2. ஆணவம் சூரன் ஆக,
அழிப்பவன் முருகன் ஆனான்!
வேணுமென் றெதிர்த்ததோடு
வேடங்கள் பல போட்டாற்கு
தோணவே பிள்ளைக் கந்தன்
தோற்றப்பேருருவு தன்னைக்
காணவே திகைத்த போதும்
கனத்ததே வயிரநெஞ்சம்!

3. அயனொடு மாலின் அந்நாள்
ஆணவப் போரின் போது
துயரிடைச் சிவனார் நின்ற
தூய பேருருவின் மேல்கீழ்
வியப்பினும் காண்போமென்ற
வீணுரை மாறித் தம்மைத்
தயவுடன் மீண்டும் கண்டோர்
சமத்துவ தீர்வும் கண்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆற்றலும் பொருளும் போன்றே
அம்பிகை சிவத்தோடொட்டும்!
தோற்றப்பேருரு எல்லாமே
சொற்பதம் கடந்து நிற்கும்!
சாற்றுவ தெவ்வா றாண்பெண்
தத்துவ நிலையு ம:்.தே!
வேற்றுமையில்லை, ஒன்றாய்
விளங்கிடும் வாழ்க்கையாமே!

5. உலகினைத் தன்னுள் கொண்ட
ஓங்கார வடிவப் பிள்ளை -
நலந்தரு வாரைக் காத்தும்,
நலங்கெடுப்பாரை மாய்த்தும்
சில பெரும் உருவங்கொண்டு
சிவமுதல் போலானாலும்,
தலமெலாம் தவறிடாமல்
தங்கிடும் தகுதியாச்சோ?

6. பால் தரும் பசுவைக் கொல்லல்
பாவத்தில் பெரிய பாவம்!
நால் மறை யாவும் கோவின்
நலம் சொலும்! ஆமாம் ஆவின்
மேல் எலாம் தேவர் வாழ்வார்!
மிகப்பெரு வடிவங்கொள்வ·
தால் அதன் புனிதமான
தன்மை யார் விளம்பவல்லார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அளவிலா ஆசை மாந்தன்
அடிக்கடி சினத்தீயால் தன்
வளமெலாம் கருக்கி வெந்து
வான் உருக்கொள்வதுண்டு!
உளத்தினில் பற்று நீங்கின்
ஒரு நடுக்கமுமே யில்லை!
களம் செலும் உழவன் போன்றோர்
காட்சி தந்துயரலாமே!

8. கண்ணினில் படாமல் நின்றே
கன தொழில் அணுவார் செய்வார்!
நுண்ணர் - பே ருருவு மாவார்!
நோக்கினால் முன்தவத்தோர்
சொன்னதைப் பின்னர் ஆய்ந்தே
தொல்புவிக் கறிவர் தந்தார்,
என்னலாம்! என மெய்ஞ்ஞானமும்
இயம்புதல் பொய்க்கூற்றாமோ?

9. எட்டுப் பேருருக்கள் தந்தார்,
இராசையா வடிவேற்சைவர்!
ஆழுவார் புராணம் - வேதம் -
ஆகமம் - அவற்றின் சாறே!
வீழுமேல் சைவம், பொல்லா
வீழ்ச்சியே தமிழ் அன்னைக்கும்!
நீளுக, அன்னார் தொண்டே!
நீடிக்க, அகவை தானே!

**'தாமரைத் தீவான்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## என்னுரை

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல அமைந்திருப்பது நமது வாழ்க்கை. நாணயத்திற்கு அரச முத்திரை ஒரு பக்கம், மதிப்பெண் மறுபக்கம். இரண்டும் சேர்ந்து இருந்தால்தான் நாணயம் செல்லுபடியாகும். அப்படி இல்லையேல் அது செல்லாக் காசுதான்.

இன்பமும் துன்பமும் மனித வாழ்க்கையின் இரு பக்கங்கள், ஒளியும் இருளும் இயற்கையின் இரு பக்கங்கள். ஞானமும் மாயையும் இறைவனின் இரு பக்கங்கள். இரு பக்கங்களையும் அறிந்து உணர்ந்து வாழ்வாங்கு வாழ்வதற்கு வாய்த்தது நமது மனிதப் பிறப்பு.

இதனை உணர்த்த நினைத்த ஞானிகளுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அறிவு விஸ்வரூபம் எடுத்தது. அதனால் மகரிஷிகளாகிய ஞானிகள் இறைத்தத்துவத்தை விளக்க புராண இதிகாசங்களை மக்களுக்குப் படைத்தளித்தார்கள். நவீன விஞ்ஞானிகள் பௌதீக சாஸ்திரங்களை ஆராய்ந்து மக்களுக்கு வழங்கினார்கள். இருதிறத்தாருடைய ஆற்றலும் அறிவு வடிவில் விஸ்வரூபம் எடுத்தது என்பதைச் சிந்தித்து எட்டு விஸ்வ ரூபங்களை இச்சிறு நூலில் எடுத்துக்காட்ட விழைந்தோம்.

விஸ்வரூபம் என்பது வடமொழி. விஸ்வம் என்பது பிரபஞ்சம். ரூபம் என்பது வடிவம். இதனைத் தமிழில் திருப்பெரு வடிவம் என்று கூறுகின்றன புராண, இதிகாசங்கள். நவீன விஞ்ஞான சாஸ்திரங்களின் விஸ்வரூபத்தை, குவாண்டத் தத்துவம் என்று கூறுகின்றனர் விஞ்ஞானிகள்.

இன்றைய உலகில், இன, மத மொழிப்பிரச்சினை களால் எழுந்த விஸ்வரூபம் உலகின் பல பாகங்களிலும் எவ்வாறு வளர்ந்து கொண்டிருக்கின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள் அப்போது விஸ்வரூபம் என்றால் என்ன என்பது புலனாகும்.

இச்சிறு நூலில் கிருஷ்ண விஸ்வரூபம், முருக விஸ்வரூபம், சிவ விஸ்வரூபம், சக்தி விஸ்வரூபம், கணேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வரூபம், பசு விஸ்வரூபம், மனித விஸ்வரூபம், அணு விஸ்வரூபம் என்னும் எட்டு விஸ்வரூபங்கள் கூறப்படுகின்றன.

அவற்றுள் கிருஷ்ண விஸ்வரூபம் மானுடனாகிய அருச்சுனனுக்கும், முருக விஸ்வரூபம் அசுரனாகிய சூரபத்மனுக்கும், சிவ விஸ்வரூபம் தேவர்களாகிய பிரம்மா விஸ்ணுக்களுக்கும் காட்டப்பட்டது.

சக்தி விஸ்வரூபம், கணேச விஸ்வரூபம் இரண்டும் மெய்ஞானிகளின் சிந்தனையிற் கிளர்ந்த விஸ்வரூபங்கள். பசு விஸ்வரூபம் மானிடனின் சிந்தனையில் பிறந்த விஸ்வரூபம். மனித விஸ்வரூபம் மனித மனத்தில் கிளர்ந்த விஸ்வரூபம். அணுவிஸ்வரூபம் நவீன விஞ்ஞானிகளின் பரிமாணமாகப் பிறந்த விஸ்வரூபம்.

விஸ்வரூப தரிசனத்தை ஞானக் கண்களால்தான் காண முடியும். பௌதீகப் பரிமாணத்தின் படி ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் நமது கண்களால் எதையும் காணமுடியாது. அவ்வாறே மற்றைய புலன்களும் ஒரு எல்லைக்குட்பட்டவை. இதனால்தான் ஞானக்கண் கொண்டுதான் காணவேண்டும் என்று ஞானிகள் கூறினார்கள். விஞ்ஞான மேதைகளும் இதை ஒப்புக் கொண்டதால்தான் ''மகா இழைத் தத்துவத்தை''ச் சார்ந்து சிந்திக்கிறார்கள்.

ஞானக்கண் என்பது நமது உணர்வு நிலையில் ஒரு மாற்றம், புத்தியின் விழிப்பு இறைவனின் இன்பகரமான மகிமைகளைத் தியானிப்பதால் புத்தி விளிப்படைகின்றது. அதுவே ஞானக்கண். அந்தக் கண்ணைக் கொண்டு இவ்வுலகைக் காணும்போது துன்பமும் தீமையும் நிறைந்த வாழ்க்கையின் மறுபக்கம் தெரிகிறது. துன்ப துயரங்களிலிருந்து விலகி ஓடாமல் அவற்றையும் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான படிக்கல்லாகப் பயன்படுத்திக் கொள்வதே பூரண வாழ்வு.

மனிதன் பூரண வாழ்க்கை வாழ்வதற்கு விஸ்வரூப தரிசனங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதை ஆழமாகச் சிந்தித்து அறியும்படி உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

**15, வித்தியாலயம் ஒழுங்கை,**
**திருக்கோணமலை.**

**ஞானசிரோமணி,**
**பண்டிதர். இ. வடிவேல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# விஸ்வரூப தரிசனம்



## கணேச விஸ்வரூபம்

''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக்கணிவோமே''

பிரணவம் என்பது ஓங்காரம். ஓங்காரத்துள்ளே உதிக்கும் பரம்பொருள் ஐங்கரன். ஐங்கரனுக்குப் பல திருநாமங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று கணபதி. கணபதியை வழிபடும் மார்க்கம் காணா பத்தியம். இந்துக்களின் இறைவழிபாட்டு நெறிகள் பலவாயிருத்தலை நினைத்து ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் ஆதியும் அந்தமும் இல்லாத இறைத் தத்துவத்தை அறுவகைச் சமயங்களாக அமைத்துத் தந்தார். அவற்றுள் ஒன்று காணாபத்தியம். கணேசப் பெருமானை வழிபடும் நெறிமுறைகள் காணாபத்தியம்.

இந்துக்கள் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் அது இடையூறின்றி நிறைவேறுவதற்காக மகா கணபதியை முதலில் வழிபடுவது வழக்கமாக இருந்து வருகிறது. இந்துக்களில் சிலர் மகா கணபதியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிரம்மமாகவே வழிபட்டு வருகிறார்கள். மகா கணபதி மூலாதார சக்தி உருவினர் என்றும், பிரணவம் என்றும், ஓங்கார வடிவினர் என்றும் அவருடைய துதிக்கை அந்த ஓங்கார தத்துவத்தையே குறிக்கும் என்றும் கூறுவார்கள்.

அவருடைய பெயருக்கும், அங்கங்களுக்கும் தத்துவ விளக்கங்கள் கூறபப்டுகின்றன. கண பதி என்னும் பதத்தினுள் 'க' என்பது மனோ வாக்குகள் 'ண' என்பது அவற்றைக் கடந்த நிலை. எனவே கணபதி என்பது மனோ வாக்கிற்கு எட்டாதவர் எனப் பொருள்படும். வம்பேதரர் என்பது காரணப் பெயர். பெருவயிறர் என்பது பொருள். அவருடைய இத்திருநாமம் நமது அறிவுக்குப் புலனாகும் இப் பிரபஞ்சம் முழுவதையும் அறிவுக்கு அப்பாற்பட்ட அண்டங்கள் அனைத்தையும் உண்டு தமது பெரு வயிற்றினுள் அடக்கிக் கொண்டவர் என்று பொருள். இது அவருடைய விஸ்வரூபம். பாலக் கிருஷ்ணன் யசோதைக்கு தன் வாயினுள் வையகத்தைக் காட்டியது போன்ற விஸ்வரூபமே கணேச விஸ்வரூபம்.

கிருஷ்ண விஸ்வரூபம், முருக விஸ்வரூபங்கள் அவரவருடைய திருமேனியில் காட்டப்பட்டவை. சிவ விஸ்வரூபம் அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத்தினுள்ளே உள்ளடங்காற்றலாகக் காட்டப்பட்டது. கணேச விஸ்வரூபம் கணேசப் பெருமானுடைய பேழை வயிற்றினுள்ளே உள்ளடங்காற்றலாகவும் திருமேனியே விஸ்வரூபமாகவும் காட்டப்படுகிறது.

எல்லா வற்றுக்கும் ஆதி தத்துவமாயும், காரிய காரணங்களுக்கெல்லாம் மூல காரணமாகவும், நிர் விகாரனாயும், அவ்யக்தனாயும், இச்சா ஞானக் கிரியா சச்சிதானந்த சொரூபமாயும் இருக்கின்ற அந்தப் பரம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியமாகிய பரப்பிரம்மத்திலிருந்து ஜடமான இப்பிரபஞ்சம் தோற்றப்பட்டிருக்கிறது. அதன் சைதன்னிய விசேஷத்தால் கேவல ஜடமான இப் பிரபஞ்சத்துக்கு உயிரோட்டமும் ஒளியும் கிடைக்கப் பெற்று பிரகாசிக்கின்றது. சைதன்னிய விஷேகம் என்பது பரப்பிரம்மத்தின் உள்ளடங்காற்றல் அதுவே பராசக்தியின் இயங்காற்றலாகப் பிரபஞ்சத்தில் செயற்படுகிறது. இந்தச் சேதனா சக்தியில் உறையும் ஆனந்தத்தின் ஒரு சிறு துளியினாலேயே இவ்வையகம் முழுவதும் மகிழ்வும், ஆனந்தமும், ஆற்றலும் பெறுகின்றது. கணேசப் பெருமான் பரப்பிரம்மம் ஆதலால் அவராலேயே இப்பிரபஞ்ச நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்று கூறுவர் கணேச பக்தர்கள்.

''ஏகச்சா சர்வ பூதாந்தராத்மா
ரூபா ரூபப் பிரதி ரூபா விகச்சா''

என்று சிருஷ்டி தத்துவத்தைப் பற்றி வேதம் சுருக்கமாகக் கூறுகின்றது. அதனை ஆகமங்கள் விளக்கமாகக் கூறியிருக்கின்றன. ஒரு பொருள் பலவாறாகத் தோற்றப்படுகின்றது என்பதே இதன் அர்த்தம். சர்வ பூதங்களுக்கும் அந்தராத்மாவாக இருக்கும் அந்த ஏகப்பொருள் (பரப்பிரம்மம்) விதவித ரூபங்களாக வடிவெடுக்கின்றன. கணேசப் பெருமான் பரப்பிரம்மமாக இருப்பதால் அவன் எடுக்கும் வடிவமெல்லாம் விஸ்வரூபங்களே.

தற்கால விஞ்ஞான முடிவுகளும் இத்தத்துவத்தை ஏற்கும் வகையில் இருப்பதை நாம் அறியக்கூடியதாயிருக்கிறது. தற்கால விஞ்ஞானிகள் 'குவாண்டத் தத்துவம்' 'மகா இழைத் தத்துவம்' என ஆய்வுகளைச் செய்திருக்கிறார்கள். இதனை, அணு விஸ்வரூபத்தில் விளக்கமாகக் கூறியுள்ளோம். அணுவை ஆராய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள் பிரபஞ்சம் முழுவதும் அணுவினாலானது என்று கண்டறிந்திருக்கிறார்கள். இது குவாண்டத் தத்துவம். அணுவுக்குள் இயங்கும் எலக்ரோன், நியூட்டோன், புறட்டோன் என்பவற்றின் இயக்க சக்தியை மகா இழைத்தத்துவம் அல்லது ஒலி, ஒளி இழைத் தத்துவம் என்கிறார்கள் விஞ்ஞானிகள். நுண்ணாடிகளால் (பூதக்கண்ணாடி) கண்டறிய முற்படும் இத் தத்துவத்தை நமது முன்னோர்களாகிய மகரிஷிகள் ஞானிகள் நுண் அறிவினால் கண்டறிந்து கூறியிருக்கிறார்கள்.

''ஓசை ஒலியெலாம் ஆனாய்நீயே''
''தேச விளக்கெலாம் ஆனாய்நீயே''

என்று நாவுக்கரசர் பெருமான் தேவாரத்தில் கூறியுள்ள ஒலி ஒளி இரண்டும் மகா இழைத் தத்துவம்.

'ஒன்றாயும் பலவாயும் உருவாயும் அருவாயும்
குன்றாய் அணுவாயும் குணமாயும் குணியாயும்
நன்றாயும் தீதாயும் நானாயுந் தானாயும்
இன்றாம் உளதாயும் இருக்குமந்தப் பரமசிவம்''
என்று தாயுமானவ சுவாமிகளும்

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி''
என்று மாணிக்கவாசக சுவாமிகளும்
''ஊனாகி உயிராகி நிற்கும் பரமசிவம்''

என்று நமது முன்னோர்களாகிய மகரிஷிகளும் ஞானிகளும் கூறிய மெய்ஞானத் தத்துவங்களை விஞ்ஞானிகள் கூறும் குவாண்டத் தத்துவங்களை கணேச விஸ்வரூபத்தில் தேடுவோம்.

துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்ய அவதரித்தவர் கணேசப் பெருமான். பிள்ளையார் என்னும் திருநாமத்தை உடையவர். அவருக்கு அநேகம் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமங்கள் காரணப் பெயர்களாக உள்ளன. எத்தனை நாமங்கள் இருந்தாலும் திருவடிவும், திருமேனியும் ஒன்றேதான். அவருடைய திருவடிவத்தின் சிறப்பம்சம் தும்பிக்கை. தும்பிக்கையான் நம்பிக்கைக்குரிய கடவுள். அவர் பிரணவ மந்திரத்திலிருந்து அவதரித்தவர்.

திருக்கயிலாய மலையில் ஏழுகோடி மந்திரங்கள் அடங்கிய மந்திர சித்திரக்கூடம் இருந்தது. கோடி என்பது அந்தம். மந்திரத்தின் அந்தங்களாகவுள்ள நம, சுவாகா, சுவதா, பட், கும்பட், வெளசட், வசட் என்பன அந்த மந்திர அந்தங்கள். அந்த மந்திர சித்திரக் கூடத்துக்கு பார்வதியும், பரமேஸ்வரனும் எழுந்தருளினார்கள் என்பது புராணக் கதை. அதன் தத்துவார்த்தம். பரப்பிரம்மமும் பராசக்தியும் ஏழுகோடி மந்திரங்களுக்குள் அந்தர்யாமியாய் இருப்பவர்கள் என்பதாகும். இந்த மந்திரங்களின் பீஜமாயிருப்பது 'ஓம்' என்னும் பிரணவம்.

அந்த மந்திரத்துள் சமஷ்டிப் பிரணவமாக இருப்பது பரமேஸ்வரன். வியஷ்டிப் பிரணவமாக இருப்பது பராசக்தி. சமஷ்டிப் பிரணவம் உள்ளடங்காற்றல், வியஷ்டிப் பிரணவம் இயங்காற்றல் இத் தெய்வீக ஆற்றலின் சைதன்னிய சக்திகள் சேரும்போது பிரபஞ்சம் உற்பவித்தது. இதனை சிவமும் சக்தியும் திருக்கண் சாத்தி அருளினார்கள் என்பதும், சமஷ்டிப் பிரணவமும் வியஷ்டிப் பிரணவமும் ஒன்று சேர்ந்தது என்பதும் புராணக் கூற்று. இதனால் பிரணவ மூர்த்தியாகிய பிள்ளையார் அவதரித்தார் என்பது அவதார தத்துவம். இந்த அவதாரத்தில் ஆனைமுகம் ஓர் ஆற்புதத் தோற்றம். பிரணவரூபம். அவர் பிள்ளையார் என்று போற்றப்படுகிறார்.

மற்றொரு புராணக்கதையில் பரமேஸ்வரன் தனது ஆஸ்தான வாயில் காவலனாக நந்தியெம் பெருமானைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்து நியமித்ததுபோல பார்வதிதேவியார் தனது ஆஸ்தான வாயில் காவலனாக பிள்ளையாரைத் தோற்றுவித்து நியமித்து சகல அதிகாரங்களையும் வழங்கினார். பரமேஸ்வரனுடைய சைதன்யம் என்பது அவருடைய அருள் நோக்கம். அது பரமேஸ்வரனுடைய உள்ளடங்காற்றல். அந்த அருள் நோக்கம் பராசக்தியின் இயங்காற்றலைத் தூண்டியதால் பிரபஞ்சம் தோற்றுகிறது. பிரபஞ்சத் தோற்றத்துக்குக் காவலனாயிருக்கும் ஆணையைப் பிள்ளையாருக்கு வழங்கியவள் பராசக்தி. பிள்ளையாருடைய அருள் நோக்கம் இல்லாமல் பிரபஞ்ச சுகத்தை அறியவோ அனுபவிக்கவோ முடியாது. இஷ்ட சிந்தனைகளை அருளுபவர் பிள்ளையார். இப்புராணக் கதையில் வியஷ்டிப் பிரணவமாகிய பராசக்தி பிள்ளையாரைத் தோற்றுவித்தாள் என்பது தத்துவார்த்தம். இரண்டு புராணக் கதைகளிலும் பிள்ளையாருடைய அவதாரம் பேசப்படுகிறது. இந்த அவதாரங்கள் கணேசப் பெருமானுடைய விஸ்வரூபம்.

எந்த மூர்த்திகளுக்கும் இல்லாத அற்புத அங்கம் துதிக்கை. சதுர்ப்புஜங்களும் துதிக்கையுமுடைய ஐங்கரக் கடவுள் இந்தத் திருமேனியோடு உபாசனா மூர்த்தியாக இருக்கின்ற கணேசப் பெருமான் துஷ்டநிக்கிரகத்தின் போதும் சிஷ்ட பரிபாலனத்தின் போதும் அதே திருமேனியோடுதான் தோற்றமளிப்பார்.

கஜமுகாசுர சங்காரம், சிந்துராஜன் போர், நராந்தகன்வதம் முதலிய துஷ்ட நிக்கிரகத்திலும் வக்ரதுண்ட விநாயகர், சிந்தாமணிவிநாயகர், பாலச்சந்திரன், கபிலவிநாயகர், சுமுகர், கஜானனர், வல்பைகணேசர் முதலிய திருநாமங்களோடு சிஷ்ட பரிபாலனம் செய்ய எடுத்த திருமேனிகளும் கணேசப் பெருமானின் விஸ்வரூபமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# முருக விஸ்வரூபம்

தேவர்கள் பொருட்டாக முருகப் பெருமானுக்கும் சூரபன்மனுக்கு மிடையே நிகழ்ந்த போரிலே, போர்க் களத்தில் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது முருகப் பெருமான் எதிரியாகிய சூரபன்மனுக்கு விஸ்வரூபத்தைக் காட்டினார். இது அசுரனுக்குக் காட்டிய விஸ்வரூபம்.

பத்து நாட்களாக நிகழ்ந்த யுத்தத்தில் சூரபன் மனுடைய இன, சன, சுற்றத்தவர்கள் படைவீரர்கள் யாவரும் அழிந்தொழியத் தன்னந்தனியாக நின்று தான் செய்த தவப்பயனால் பெற்ற மாய வித்தையின் திறமையினால் இறுதி நான்கு நாட்களும் தொடர்ந்து பல மாய உருவங்களை எடுத்துக் கொண்டு முருகப் பெருமானை எதிர்த்து நிற்கிறான் சூரபத்மன்.

சூரபன்மன் அண்ட முகட்டைத் தொடும் உயரத்திற்கு மலைவடிவாக உருமாறினான். ஏழு கடலையும் வற்றச் செய்து கதிரவன் செல்லும் வழியையும் மறைத்து நின்றான். திக்குகளையெல்லாம் மூடினான். நீர்வடிவாகி விண்ணுலகத்தைத் தொடும் வண்ணம் எழுந்து நின்றான். அனல் வடிவமாக அண்டங்களெல்லாம் எரியும்படி வந்தான். சூறாவளியாக மலைகள் பஞ்சுபோல் பறக்கும்படி ஆரவாரித்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரபன்மன் நான்கு நாட்கள் வரையும் எதிர்த்து நின்று பலபல உருவங்களில் முருகப் பெருமானுடன் போர் புரிந்தான். மும்மூர்த்திகள்போல வந்தான் இந்திரன் போல் வந்தான். இமயன் போல் வந்தான். கடல் போன்று வந்தான். முகில் போன்று வந்தான். சூரியனைப் போலவும், திக்கு யானைகளைப் போலவும், தாரகனைப் போலவும், பானுகோபனைப் போலவும் வந்தான். முருகப் பெருமான் சூரபன்மன் எடுத்த ஒவ்வொரு மாய வடிவங்களையும் அம்புகளால் அழித்து நின்றார்.

சூரபன்மன் எடுத்த மாயவடிவங்கள் யாவும் தனித் தனியான உருவங்கள் அவை சூரனுடைய விஸ்வரூபமல்ல. மாய வேஷங்கள் யாவும் ஒரே நேரத் தில் ஒரே உடலில் எடுக்கப்பட்டிருந்ததால் அது சூரபன் மனின் விஸ்வரூபமாகிவிடும். அவ்வாறு நிகழவில்லை. மாய வேஷங்கள் யாவும் அழிந்தபின் சூரபன்மன் போர்க்களத்தில் பெருங் கோபத்துடன் தனித்து நின்றான்.

முருகப் பெருமான் அவனை நோக்கி அறிவிலியே! அழியும் மின்னலைப் போன்று நீ எடுத்த மாய வேஷங்களையெல்லாம் நாம் அழித்தோம் அழியாத நமது விஸ்வரூபத்தை உனது தவப் பயனால் நீ காண்பாயாக, என்று தமது திருப்பெரு வடிவத்தைக் காட்டினார். அதனைக் காண்பதற்குரிய ஞானக்கண்ணை யும் சூரபன்மனுக்கு அருளினார்.

பாரதப் போர்க்களத்திலே பக்தனான பார்த்த னுக்குப் பரந்தாமன் விஸ்வரூபம் காட்டினார். முருகப் பொருமானோ எதிரியாகிய சூரபன்மனுக்கு அந்த எழிற் கோலத் திருப்பெரு வடிவத்தைக் காட்டியருளினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமான் விஸ்வரூபம் எடுத்தபோது கடல்கள் உலகங்கள் திசைகள் தேவர்கள் உயிரினங்கள் யாவும் அவரது திருமேனியில் அடங்கின. அந்தத் திருமேனியின் பாதத்தின் உள்ளடியில் மலைகளும், புறவடியில் கடல்களும், பாத விரல்களில் இடியும், நட்சத்திரங்களும், கிரகங்களும் அடங்கின. பரட்டில் வருணனும், குபேரனும் நிருதியும், அரசர்களும், கணைக் கால்களில் முனிவர்களும், முழந்தாளில் வித்தியா தரர்களும், தொடையில் இந்திரனும், சயந்தனும், தொடை மூலத்தில் இயமனும் காலனும் அடங்கி இருந்தனர்.

அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும், விலாப் புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர்களும், குறியில் அமிர்தமும், நாபியில் உயிர் வர்க்கங்களும், மார்பில் சர்வ கலைகளும், உபவீதத்தில் ஞானமும் அடங்கி இருந்ததைக் கண்டான். உரோமத்தில் அண்டங் களும், அங்கையில் சகல போகங்களும், தோள்களில் திருமாலும், பிரம்மனும், கை விரல்களில் தெய்வப் பெண்களும், கண்டத்தில் ஒலியின் கூட்டங்களும், அக்கினியும், வாயில் வேதங்களும், பற்களில் அட்சரங்களும், நாவில் சிவாகமங்களும், உதட்டில் ஏழு கோடி மகா மந்திரங்களும், நாசியில் வாயுவும், கண்களில் சூரிய சந்திரர்களும், காதுகளில் திக்குகளும் அடங்கியிருந்தன. நெற்றியில் பிரணவமும், தலையில் பரமசிவனும் பொருந்தித் தோன்றியதும் அனந்தகோடி சூரியர்கள் ஒருங்கே கூடினாற்போல் பேரொளியுடன் கூடிய ஒப்பற்ற விஸ்வரூபத்தைக் கண்டதும் சூரபன்மனின் அறிவு தெளிவடைந்து அவன் பெரிதும் வியப்படைந்தான்.

விஸ்வரூபத்தைக் கண்டு வியப்புற்ற சூரபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுக்கு முருகப் பெருமான் சிறிது நல்லுணர்வு அருளினார். நல்லுணர்வு பெற்ற சூரபன்மன் அன்று தூதுவனாக வந்த வீரவாகு தேவர் முருகனும் சிவனும் ஒருவரே எனக் கூறினான். அது முற்றிலும் உண்மை என்று தெளிந்தான் சூரபன்மன். முருகனைப் பாலனென்றி ருந்தேனே என நொந்து கொண்டான். முருகப் பெருமான் தேவர்க்கும் மூவர்க்கும் முதலாய் நின்ற முழுமுதற் பொருள் என்ற உணர்ச்சி உண்டாயிற்று.

''கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசலை உணர்த்திலேனால்
மாலயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ''

(கந்தபுராணம்)

முருகன் தனக்கு ஞானக் கண்ணைத் தந்தருளியது நான் செய்த தவப்பயன் என்று முருகனைப் புகழ்ந்தான். விசுவரூபத்திலுள்ள ஒளியும், சீரும், இளமையும், அழகும் ஆகிய இவையெல்லாம் உலகில் வேறு யாரிடத்தில் உள்ளன. அற்புதமான இத் திருப்பெரு வடிவத்தைப் பலகால் பார்க்கினும் என் பார்வை தெவிட்டவில்லை. சமானமில்லாத இத்தனிப் பெருங் கடவுளுடைய விஸ்வரூபத்தை நோக்கி அஞ்சுவதன்றி வேறு என்ன செய்ய முடியும். நான் அழியாத சிறந்த வரத்தைப் பெற்றுள்ளேன். ஆதலால்தான் காண்கின்றேன்.

சூரபன்மன் அழியாத வரம் பெற்றவன். முருகப் பெருமானுக்கு சேவலும் மயிலுமாகி சேவை செய்ய வேண்டுமென்று பண்டைக் காலத்தில் தவம் செய்தவன் சூரபன்மன். அத்தவம் நிறைவேறுவதற்கே முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவேல் துளைத்து அசுர வடிவம் நீங்கி சேவலும் மயிலுமாவதற்கே அவன் இனிப் போர் புரியப் போகின்றான்.

முருகப் பெருமானின் விஸ்வரூபத்தைக் கண்ட சூரபன்மனின் சினம் தணிந்தது. உரோமங்கள் பொடித்தன. கண்ணீர் பெருகியது. எலும்பு உருகியது. அன்பு பெருகியது. அகந்தை நீங்கியது. ஞானம் பிறந்தது. வலப் புயமும் வலக் கண்ணும் துடித்தன. இது நான் செய்த தவப்பயனேயாகும், என்றெண்ணிப் பெருமிதங் கொண்டான். முருகப் பெருமானைத் தொழுதிடல் வேண்டும் என்று எண்ணினான் சூரபன்மன். அவனுடைய மனம் வணங்கியது. ஆனால் மானம் வணங்கவில்லை தடுத்தது.

''சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு
ஆழுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்கு ஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்ததுமானமொன்றே.
(கந்தபுராணம்)

என்று கூறுகிறார் கச்சியப்ப சுவாமிகள்.

கூன், குருடு, செவிடு போன்ற ஊனங்களெல்லாம் இந்த உடம்போடு போய்விடும். ஆனால் தன்மானம் இழந்து சலிப்பதால் ஏற்படும் விளைவு ஏழேழ் பிறப்பிற்கும் தொடர்ந்து வரும் என்று நினைத்துச் சூரபன்மன் முருகப் பெருமானை எதிர்த்துப் போர் புரிந்து தான் செய்த தவப்பயனால் சேவலும் மயிலுமானான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப் பெருமானுடைய விஸ்வரூபத்தை பெருமான் அருளிய ஞானக்கண் கொண்டுதான் சூரபன்மன் காண்கிறான். அந்த ஞானத்தாலும் அவனுடைய மாயாமலம் அழியவில்லை. அகந்தை ஒழியவில்லை. அவன் செய்த தவப்பயன் அது. முருகனுக்குச் சேவலும், மயிலுமாகிச் சேவை செய்ய வேண்டும் என்பது அவனுடைய தவப்பேறு.

சூரபன்மன் ஆண்ட ஆயிரத்தெட்டு அண்டங்களிலு முள்ளவர்களில் யாருமே தவத்தினாலோ, யாகங்க ளாலோ தானங்களாலோ, கிரியைகளாலோ, படிப்பறி வினாலோ காணமுடியாத திருப்பெரு வடிவத்தை, விஸ்வரூபத்தை சூரபன்மன் காண்கிறான். ஆனால் வைராக்கிய புத்தியும், தன்மானமும் அவனை ஆட்கொண்டு விட்டது. அதுவும் அவன் செய்த தவப்பேறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சிவ விஸ்வரூபம்

பிரம்ம தேவனுக்கும், மகா விஷ்ணுவுக்குமிடையே எல்லையற்றகாலம் வெற்றி தோல்வியின்றி அகங்காரப் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது சிவபெருமான் இருவருக்குமிடையே தனது விஸ்வரூபத்தைக் காட்டுகிறார். இது தேவர்களுக்குக் காட்டப்பட்ட விஸ்வரூபம்.

கிருஷ்ண விஸ்வரூபம் மனிதனாகிய அருச்சுன னுக்கு காட்டப்பட்ட விஸ்வரூபம். முருக விஸ்வருபம் அசுரனாகிய சூரபன்மனுக்குக் காட்டப்பட்ட விஸ்வரூபம். சிவ விஸ்வரூபம் பிரம்ம விஷ்ணுக்களாகிய தேவருக்குக் காட்டப்பட்ட விஸ்வரூபம். இது ஒரு தனித் தன்மையானது.

கிருஷ்ணனும் முருகனும் தங்கள் தங்கள் உருவத் திருமேனியில் விஸ்வரூபத்தைக் காட்டினார்கள். சிவபெருமான் தனது அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத்தில் விஸ்வரூபத்தைக் காட்டியருளினார். சிவ விஸ்வரூப வரலாறு கந்த புராணத்தில் அடிமுடிதேடிய படலத்தில் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆதலின் நமது சக்தி அறுமுகனவனும் யாமும்
பேதகமன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்''

(க.பு உற்பத்திப் படலம்)

முருக விஸ்வத்தில் கூறப்பட்ட விஸ்வரூப அம்சங்கள் எல்லாம் சிவலிங்க ரூபமாகிய ஆதியந்தமில் லாத அடிமுடியில்லாத சோதி இலிங்கத்தில் உள்ளடங் காற்றலாகக் காட்டப்படுகிறது.

திருவாசகத்தில் திருவண்டப் பகுதியில் ''பிரமன் மாலறியாப் பெற்றியோனே'' என்று சிவபெருமானுடைய சிவ விஸ்வரூபத்தை குறிப்பிடுகிறார் மாணிக்கவாசக சுவாமிகள். ''பிரமன் மாலறியாப் பெற்றியோன்'' என்பது சிந்திக்கத் தக்கதாகும். சிவனைப் பற்றி எத்தனை எத்தனையோ மகிமைகளையும், அற்புதங்களையும் கூறலாம் எனினும் பிரமன் மாலறியாப் பெற்றியோன் என்று இங்கு கூறியதற்கு ஒரு காரணமுண்டு.

அறிவாலும், செல்வத்தாலும் அடைய முடியாதவன் இறைவன். பிரமதேவன் சகல கலாவல்லியாகிய சரஸ்வதி தேவியைச் சக்தியாக்கிக் கொண்டு அறிவைத் தரவல்ல படைத்தற் கடவுள். மகாவிஷ்ணு சகல செல்வங்களையும் தரவல்ல சௌபாக்கியவதியான இலக்குமி தேவியைச் சக்தியாகக் கொண்டு செல்வத்தை தரவல்ல காத்தற் கடவுள். இவர்கள் தரும் கல்வியாலும் செல்வத்தாலும் சிவபெருமானை அடையமுடியாதென்று கூறுகின்றது திருவாசகம்.

திருஞான சம்பந்தர் அருளிச் செய்த திருக்கோண மலைத் திருப்பதிகத்திலே ''பெருங்கடல் வண்ணனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமனுமறியா வண்ணம் ஒள்ளெரியாய் உயர்ந்தவர்" என்று சிவபெருமானைப் பாடியுள்ளார். தேவார முதலிகளாகிய மூவரும் அருளிச் செய்த திருப்பதிகங்களிலே மூவரும் இந்தத் திருப்பெரு வடிவத்தைப் பாடியுள்ளார்கள். எனவே கச்சியப்ப சிவாச்சாரியார் கந்த புராணத்தில் கூறியுள்ள சிவபெருமானின் விஸ்வரூபத்தைக் காண்போம்.

விஸ்வரூபத்தைக் காண்பதற்கு அருச்சுனனிடம் அறிவுத் தாகம் இருந்தது. சூரபன்மனிடம் அதிகார வேட்கை இருந்தது. பிரம, விஷ்ணுக்களிடம் அகங்கார மோகம் இருந்தது.

சிவபெருமானை அவமதித்து தக்கன் செய்த பெருவேள்வியிலே சிவனுடைய பேராற்றலால் வீரபத்திர னைத் தோற்றுவித்து, அவரால் பெருவேள்வி சீரழிக்கப் பட்டு, தக்கனுடைய தலை அறுக்கப்பட்டு அவனுடைய தலைக்குப் பதிலாக ஆட்டின் தலையை வைத்தவர் வீரபத்திரக் கடவுள். இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பிரமதேவன் தக்கனுடைய ஆணவ மயக்கத்தை விளக்கித் தனது வரலாற்றைக் கூறுகிறார்.

ஊழிப் பேரழிவின் பின் ஒரு படைப்புத் தொழிலின் போது நானும் திருமாலும் உலகப் படைப்பு எங்களாலேயே நிகழ்கின்றது என்று மிகுந்த ஆணவம் கொண்டோம்.

என்னாலன்றி உலகத்தில் எந்தப் பொருளும் உண்டாகுமா? எல்லா உயிர்களையும் படைத்து ஆட்டுகின் றவன் நான். எந்தப் பொருளும் நான். நாராயணனாகிய கடவுளும் நான். எல்லாரையும் படைத்தவன் நான் என்று பலவற்றையும் கூறினான் பிரமதேவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனந்த சயனத்தில் அறிதுயில் கொண்டிருந்த விஸ்ணு மூர்த்தியானவர் பிரம்மனே! எனது உந்திக் கமலத்தில் பிறந்தவன் நீ. சிவபெருமான் உனது உச்சித் தலையைக் கிள்ளி எடுத்தார். அதனை இன்னும் நீ படைக்கவில்லை. இத்தகைய என்னை நீ படைத்ததாகக் கூறுவது வியப்பாக இருக்கிறது என்று கூறினான் மகாவிஷ்ணு. இதனால் நீண்ட விவாதத்திற்குப் பின்னே இருவருக்குமிடையே கடும் போர் நிகழ்ந்தது.

நீண்ட காலமாக இருவரும் ஒருவர் மீது ஒருவர் பல படைக் கலங்களையும் பிரயோகித்தனர். முடிவில் இருவரும் சிவப்படைக் கலத்தைப் பிரயோகித்தனர். இரண்டு படைக் கலங்களும் போர் செய்தன. அதனால் உலகமெல்லாம் கலங்கின. எங்கும் தீப்பிளம்புகள் செறிந்தன. பல உயிர்த்தொகைகள் அழிந்தன. இவ்வாறு நாங்கள் போர் செய்துகொண்டிருக்கும் போது நாரத முனிவர் தோன்றி எங்களுக்கு அறிவுரை கூறினார். அதனையும் பொருட்படுத்தாமல் ஆணவமிடுக்கினாலே போரைத் தொடர்ந்தோம். எங்கள் அறியாமையைப் போக்கத் திருவுளங்கொண்ட சிவபெருமான் தோன்றினார்.

மாசித் திங்கள் அபர பட்சத்தின் பதினைந்தாம் நாள் நள்ளிரவில் எங்கள் இருவருக்கும் நடுவே ஒரு அக்கினி மலையாகத் தோன்றினார். நாங்கள் செலுத்திய சிவப் படைக்கலங்களை அந்த அக்கினி மலை தன்னுள் அடக்கிக் கொண்டது. அந்த அற்புதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். சிறுவர்காள்! உங்களுடைய ஆற்றலை சிவபெருமான் காண்பார். நீங்கள் இந்த மலையின் அடியையும் முடியையும் தேடிக் காணுங்கள் என்று ஒரு அசரீரி வாக்கு எழுந்தது. அதைக்கேட்டு சினம் நீங்கினோம் ஆயினும் ஆணவம் நீங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இருவரும் சூளுரை கூறிக் கொண்டோம் அடி, முடிகளில் ஒன்றைக் கண்டவரே முதற் கடவுளா வோம், என்று சூளுரைத்து ஒப்புதல் செய்து கொண்டோம்.

திருமால் பன்றி வடிவை எடுத்துக் கொண்டு அதலம், விதலம், சுதலம், தராதலம், மகாதலம், பாதாளம் முதலிய கீழ் ஏழ் உலகங்களையும் அகழ்ந்து கொண்டு அடியைத் தேடிச் சென்றார். பிரமன் ஒரு பெரிய அன்னப் பறவையின் வடிவை எடுத்துக் கொண்டு பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபலோகம், மகாலோகம், சத்தியலோகம் முதலிய மேல் ஏழ் உலகங்களையும் தாண்டிச் சென்று தேடினார் முடியைக் காணவில்லை.

இருவரும் ஆணவம் ஒழிந்து சிவலிங்கப் பெருவடிவை வணங்கி வழிபாடு செய்தோம். கருணை மூர்த்தியாகிய சிவபெருமான் அந்த விஸ்வரூபத்திலிருந்து வெளிப்பட்டு எங்களுக்கு அருள் புரிந்தார். சிவபெருமான் அந்தச் சுடர்வடிவ இலிங்கத் திருமேனியிலே ஐக்கியமானார்.

சிவபெருமான் இலிங்கோற்பவராகத் தோன்றிய நாளே சிவராத்திரி எனப்படுகிறது. அவர் அக்கினி மலையாகத் தோன்றிய திருமேனிக்குள் முருகப்பெருமான் எடுத்த விஸ்வரூபத் தெய்வீக அம்சங்கள் அனைத்தும் உள்ளடங்காற்றலாகப் பொருந்தி நிறைந்துள்ளன என்பதை கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிச் செய்த கந்தபுராணத்தில் 'ஆதலின் நமது சக்தி ஆறுமுகனவனும் யாமும் பேதகமன்றாம்' என்று விளக்கியுள்ளார்.

சிவபெருமான் எடுத்த அருவுருவத் திருமேனியாகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலிங்கத்தினுள்ளே உள்ளடங்காற்றலாக சகல அண்டங்களும் சகல தேவுக்களும், சகல ஜீவராசிகளும் அடங்கியுள்ளன. இதுவே சிவ விஸ்வரூபம். சமஷ்டிப் பிரணவமாகிய அந்த இலிங்கம் ஜோதி சொரூபமாகப் பிரகாசித்தது. பிரபஞ்ச மர்மங்களெல்லாம் அதனுள் அடங்கி விட்டது. பரப்பிரம்மமே சிவலிங்க வடிவில் காட்சியளித்தது. இதுவே சிவபெருமான் எடுத்த விஸ்வரூபம். விஸ்வரூப தரிசனத்தைப் பெறுவதென்பது எங்ஙனம் என்பதை முருக விஸ்வரூப தரிசனத்தில் காண்க.

சிவபெருமான் காட்டிய விஸ்வரூபத்தை அப் பெருமான் அருளிய ஞானக்கண் கொண்டுதான் படைத்தற் கடவுளாகிய பிரமதேவனும் காத்தற் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியும் காண்கின்றனர். அதனால் அவர்களுடைய ஆணவமலம் அழிந்தது. ''நான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த உலகம்புகும்'' என்பது திருவள்ளுவர் கூற்று. தவத்தினாலோ யாகத்தினாலோ கிரியைகளாலோ கல்வி அறிவினாலோ காணமுடியாத திருப்பெரு வடிவமாகிய விஸ்வரூபத்தை நான் எனது என்னும் செருக்கறுந்தவர்களாகிய பிரமதேவனும் விஷ்ணு மூர்த்தியும் ஞானக் கண்ணால் கண்டார்கள்.

''ஆதலின் நமது சக்தி ஆறுமுகனவனும் யாமும்
பேதகமன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான்
சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினார்க் கருளவல்லான்''

(4.உற்பத்திப் படலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சக்தி விஸ்வரூபம்

ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல இறைதத்துவமாகிய பரப்பிரம்மத்துக்கு பராசக்தி ஒரு பக்கம் பரமேஸ்வரன் மறு பக்கம். அதாவது சக்தி ஒருபக்கம் சிவம் மறுபக்கம் என்று கொள்ளவேண்டும். ஆகையால் சக்தி பெரியதா? சிவம் பெரியதா? என்று பிரித்துப் பேசக் கூடாது.

சிவமும் சக்தியும் ஒன்றே. அதுவே பிரம்மம். ஆனால் சக்தியின் மகத்துவத்தைத்தான் நாம் வெளிப்படையாகப் பார்க்கிறோம். நமது உடற் சக்தியே நமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பெரிதும் உபயோகப்படுகிறது. சக்தி இருந்தால் செய் இல்லா விட்டால் சிவமே என்று கிட என்பது உடற் சக்தி பற்றிய தர்மதத்துவ விளக்கம்.

கட்டித் தங்கமும் அணிகலமும் ஒன்றே. ஆனால் கட்டித் தங்கத்தை வைத்துக் கொண்டு என்ன பிரயோசனத்தை அடைய முடியும். கட்டித் தங்கத்திற்கு நிறமுண்டு ஒளியுண்டு மதிப்புண்டு விலையுண்டு. ஆனால் அதை அப்படியே உபயோகிக்க முடியாது. அதை ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவமாக அமைத்துக் கொண்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அதை நகையாகச் செய்து கழுத்தில் காதில் கைகளில் அணிந்து கொண்டால் மிகவும் மதிப்புண்டு. நகையை அணிந்து கொள்ள முடியும். கட்டித் தங்கமாக இருந்தால் பெட்டியில் தான் வைக்க முடியும். அணிந்து கொள்வதற்கேற்ப அதை உருவாக்க வேண்டும்.

சிவம் என்பது கட்டித் தங்கம். சக்தி என்பது அணிகலனான தங்கம். உருவமில்லாத கட்டித் தங்கம் சிவம். சிவத்துக்கு உருவம் தருவது பராசக்தி. சிவபெருமான் பராசக்தியாலேயே உருவத்தை எடுத்துக் கொள்கிறார். சிவத்துக்குச் சக்தி தருவதுதான் உருவம். அதனால் நாம் சிவத்தையும் உருவ வடிவில் வழிபடுகின்றோம். அதுவே சிவசக்தி வழிபாடாகும்.

பெண்கள் அணிந்து கொள்ளும் ஒவ்வொரு அணிகலன்களையும் ஒவ்வொரு சக்தியின் திருவுருவம் போல கற்பனையாக எண்ணிக் கொள்ளலாம். அணிகலன்களை அணிந்து அகமகிழ்வதுபோல அனைத்துச் சக்தித் திருவுருவங்களையும் வழிபட்டு அனைத்துச் சம்பத்துக்களையும் அருளையும் பெற்று மன நிறைவடைகிறோம். அதனால் பராசக்திக்கு அதிக மதிப்புக் கொடுக்கிறோம்.

சிவனுக்கு ஒரு இராத்திரி வழிபாடு செய்கிறோம் சிவராத்திரி. சக்திக்கு ஒன்பது இராத்திரி வழிபாடு செய்கிறோம் நவராத்திரி. சிவராத்திரியன்று பட்டினி கிடந்து விரதம் இருக்கிறோம். நவராத்திரி வழிபாட்டில் பொங்கல் சுண்டல் என்று பிரசாதம் பிரமாதமாயிருக்கும்.

அப்பா பிள்ளைகளை அடித்துத் திருத்துவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அம்மா அணைத்துத் திருத்துவாள். அதனால் அம்மாவுக்கு மதிப்பு அதிகம். ஆயினும் அம்மாவுக்கு மதிப்புத் தருவது அப்பாதான். சக்திக்கு மதிப்புத் தருவது சிவம்தான் அப்பா இல்லாமல் அம்மா இல்லை. அம்மா இல்லாமல் அப்பா இல்லை. சிவமின்றிச் சக்தியில்லை. சக்தியின்றி சிவமில்லை. சிவமும் சக்தியும் சேர்ந்ததே பரப்பிரம்மம்.

பரப்பிரம்மம் பிரபஞ்ச உற்பத்திக்கு ஆதி தத்துவம். சிவமும் சக்தியும் சேர்ந்திருப்பது அர்த்தநாரீஸ்வர வடிவம். இத் தத்துவத்தில் சிவமும் பரப்பிரம்மம். சக்தியும் பரப்பிரம்மம். சிவனிலிருந்து பிரிக்க முடியாத தாதான்மிய சக்தியாகிய திரோதான சக்தியை ஆதி சக்தி என்றும் பராசக்தி என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. சிவன் உள்ளடங்காற்றல் பராசக்தி இயங்காற்றல் ஒவ்வொரு பிரளயத்திற்குப் பின்னரும் பரப்பிரம்மத்தின் இச்சை என்றும், எண்ணம் என்றும் கூறத்தக்க பராசக்தி பரமாத்மாவின் சலனமாகிய மூலப் பிரகிருதியின் விசேஷ சலனத்தினால் ஆதிபூதமாகிய ஆகாச தத்துவம் உண்டாயிற்று. இவ்வாறே இயங்காற்றலாகிய பராசக்தி ஆகாயத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்கினி, அக்கினியிலிருந்து நீரும் நீரிலிருந்து பிரகிருதியையும் தோற்றுவித்து பஞ்ச பூதங்களுக்கும் அதி தேவதையாக பராசக்தி பரிணமிக்கிறாள்.

பிரபஞ்ச அமைவுக்காகவும் அவற்றின் இயக்கத்திற் காகவும் சக்தி தத்துவமானது செயற்படுகின்றது. ஆகாய தத்துவத்தில் செயற்படும் பிரம்மத்திற்கு சதாசிவன் என்றும் அதன் சக்தி சாம்பவி என்றும், வாயுவில் பிரதிபலிக்கும் பிரம்மத்திற்கு மகேஸ்வரன் என்றும் அதன் சக்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஸ்வரி என்றும் தேயுவில் பிரதிபலிக்கும் பிரம்மத்திற்கு ருத்திரன் என்றும் அதன் சக்திக்கு ருத்திராணி என்றும், நீரில் பிரதிபலிக்கும் பிரம்மத்திற்கு விஷ்ணு என்றும், அதன் சக்திக்கு வைஷ்ணவி என்றும், பிருதிவியில் பிரதிபலிக்கும் பிரம்மத்திற்கு பிரம்மா என்றும் அதன் சக்திக்கு பிரம்மாணி என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு இயங்காற்றலாக விளங்கும் தேவி பராசக்தியை பிரணவ சொரூபி என்றும் ஞான சொரூபி என்றும் ஞானிகள் கூறுவார்கள். ஆனந்த மயமாக விளங்கும் அப் பராசக்தி தன்னிச்சையால் வடிவெடுத்த காலத்தில் அந்த இறைவியின் விஸ்வரூபம் எங்ஙனமெனில் சுவர்க்கமே சிரசாகவும் ஆகாயமே கொப்பூளாகவும், சூரிய சோம, அக்கினிகளே திரி நேத்திரங்களாகவும், அட்ட திசைகளும் செவிகளாகவும் பாதாளமே திருவடியாகவும், நட்சத்திரங்களே முத்து மாலையாகவும், ஆகாய வாசிகளாகிய தேவர்களே தோள்களாகவும், சமுத்திரமே ஆடையாகவும், சப்த மேகங்களும் கூந்தலாகவும் வாயுவே சுவாசமாகவும், திவ்ய திருமேனி தாங்கியுள்ளாள் என்று பராசக்தியின் விராட் சொரூபத்தை விஸ்வரூபத்தை விளக்குகிறது தேவி பராக்கிரமம் என்ற நூல்.

திருக்கோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் ஆலய இராஜ கோபுரம் பராசக்தியாகிய ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் விஸ்வரூபமாக அமைந்துள்ளது. அவ்வாறே இராஜ கோபுரமுடைய ஒவ்வொரு ஆலயங்களிலுமுள்ள இராஜ கோபுரங்கள் அந்தந்த ஆலயங்களின் மூல மூர்த்தியினுடைய விஸ்வரூபமாகப் பிரகாசிக்கின்றன.

பராசக்தியிடமிருந்தே சர்வப் பிரபஞ்சங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. பிரமதேவன் முதலான தேவுக்களும், வேதியர்களும் தேவியின் திருமுகத்தினின்றும் தோன்றினர். இந்திரன், உபேந்திரன் முதலிய மன்னர்களை தேவியின் தோள்களினின்றும், வைசியர் தேவியின்தொடையினின்றும் சூத்திரர் தேவியின் திருவடிகளினின்றும் தோன்றியதாகவும் தேவி பாகவதம் கூறுகின்றது.

பராசக்தி தன் இச்சை வடிவாய் எழுந்த திருமேனிக்கு நாமரூபம் இல்லையென்று வேதங்கள் கூறுகின்றன. ஆனால் அவ்வப்போது பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதன் பொருட்டும், துஷ்ட சங்காரத்தின் பொருட்டும் எடுத்த திருமேனிகள் அநந்தம். தேவி பாகவதம், தேவிமகாத்மியம் என்னும் நூல்களில் ஆதிபராசக்தியின் பொருட்டு அவள் எடுக்கும் திருமேனிகளின் வடிவங்களும் விரிவாகக் கூறப்படுகின்றன. அவையெல்லாம் விஸ்வரூபங்கள்.

தெய்வத் திருவுருவங்கள் அங்கம் உபாங்கம் என்னும் இரு அம்சங்களை உடையன. இவற்றை அவ்வத் திருவுருவங்களில் காணலாம். ஆதிபராசக்தி தன் இச்சையால் எடுக்கும் திருமேனிகள் அனைத்தும் பராசக்தியின் விஸ்வரூபங்களே.

உதாரணமாக, துர்க்கா பரமேஸ்வரி என்ற பொதுப் பெயரால் வழிபடப்படும் ஞானாம்பிகை தன் மூன்று அம்சங்களை மாகாளி, மகாலெட்சுமி, மகாசரஸ்வதி என்ற திருநாமங்களினால் விசேஷமாகப் பூஜிக்கப்படுகின்றாள். அஞ்ஞானத்தின் பல வடிவமான அரக்கர்களை அழித்தவள் துர்க்கா பரமேஸ்வரி. மது கைடப வதத்திற்குக் காரணமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தவள் மாகாளி, மகிஷாசுரனை மர்த்தனம் செய்தவள் மகாலெட்சுமி. சும்ப-நிசும்பரை மர்த்தனம் செய்தவள் மகாசரஸ்வதி. இந்த மூன்று சக்திகளின் திருமேனிகளும் மகா துர்க்கா தேவியின் அம்சங்கள்.

மார்க்கண்டேயப் புராணத்தில் ஆதிபராசக்தியின் அம்சங்களை பல திருமேனிகளாகக் கூறப்படுகிறது. சண்டமுண்ட சங்காரம் செய்தவள் சாமுண்டி, அர்த்தாசுரன், அர்த்தசீரன் ஆகிய அசுரர்களை அழித்தவள் கௌரி. பண்டாசுரனை வதம் செய்தவள் திரிபுரை. வாணாசுர சங்காரம் பார்வதி தேவியால் நிகழ்ந்தது. இந்தத் திருவடிவங்களெல்லாம் பரா சக்தியின் விஸ்வ ரூபங்களாகும்.

கிருஷ்ண விஸ்வரூபத்தில் ஸ்ரீகிருஷ்ணன் தனது சூக்குமத் திருமேனியில் அருச்சுனனுக்கு விஸ்வரூபங் காட்டினான். முருகப்பெருமானின் விஸ்வரூபத்தில் முருகன் தனது சூக்குமத் திருமேனியில் சூரபன்மனுக்கு விஸ்வரூபங் காட்டினார். சிவலிங்க ரூபத்தில் சிவபெருமான் தனது அருவுருவ இலிங்கத்துள் பிரம்மா விஷ்ணுக்களுக்கு விஸ்வரூபங் காட்டினார். ஆதிபராசக்தியின் விஸ்வரூபத்தில் தனது தூலத் திருமேனியாகிய ஒவ்வொரு வடிவத்திலும் அசுரர்களுக்கு விஸ்வரூபம் காட்டினாள். ஆதிபராசக்தி எடுத்த ஒவ்வொரு திருமேனியும் விஸ்வரூபங்களே.

இவற்றில் ஆதிபராசக்தியே அதிசூக்கும மகாசக்தியாக நவராத்திரி நாட்களில் வழிபடப் படுகின்றாள். அம்பிகையின் இச்சா சக்தியை மாகாளி என்றும், கிரியா சக்தியைத் திருமகள் என்றும், ஞானா சக்தியை சரஸ்வதி என்றும் வழிபடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிபராசக்தியானவள் நவராத்திரி ஒன்பது நாட்களிலும் நவசக்திகளாக வழிபடுவதற்கு ஒன்பது திருமேனிகளை எடுக்கிறாள்.

முதல்நாள் தேவியை பூவையாகப் பூஜிக்கி ன்றோம். அன்று தேவி உருத்திராக்க மாலையுடன் காட்சி தருகிறாள்.

இரண்டாம் நாள் தேவி நவாக்ஷரி எனப்படுகிறாள். அன்று அம்பிகையை ராஜராஜேஸ்வரி யாக அலங்கரிப்பார்கள். அவளுடைய கையில் கரும்புவில்லும், அம்பும், பாசாங்குசமும் இருக்கும்.

மூன்றாம் நாள் தேவி பஞ்சதசாட்சரியாக பூஜிக்கப்படுகிறாள். அன்று மகிஷன் தலைமீது வீற்றிருப்பதாக அலங்கரிக்கப்படுகிறாள்.

நாலாம் நாள் தேவி சிங்கத்தின்மீது அமர்ந்து தன்னை வணங்கும் அடியார்களுக்கு தனது வெற்றிக் கோலத்தைக் காட்டி அருள் புரிகிறாள். இந்தக் கோலத்தை ரோகிணி என்பர்.

ஐந்தாம் நாள் ததாக்ஷீ என்ற நாமத்துடன் அசுரர்களின் தூதைச் செவிமடுப்பவள் போல் காட்சி தருகிறாள்.

ஆறாம் நாள் சண்டிகா தேவியாக தூம்ரலோசனன் என்னும் அசுரனை வதைக்கும் கோலத்தில் சர்ப்பாசனத்தில் அமர்ந்து கையில் உருத்திராக்க மாலை கபாலம் தாமரை பொற்கவசம் தாங்கியவளாகக் காட்சியளிக்கின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் நாள் சாம்பவி என்று பூஜிக்கப்படுகின்றாள். ஒரு பாதத்தை தாமரையில் ஊன்றிக் கொண்டிருப்பதாகக் காட்சியளிக்கின்றாள்.

எட்டாம் நாள் மகா இலக்குமியாக வழிபடப் படுகிறாள். கருணை நிறைந்த கண்களுடன் அஷ்டலெட்சுமி களுடன் வீற்றிருப்பதாக தேவி காட்சியளிக்கிறாள்.

ஒன்பதாம் நாள் மகாசரஸ்வதியாக பூசிக்கப்ப டுகிறாள். இவ் வடிவத்தைக் காமேஸ்வரி என்றும் கூறுவர். வில் அங்குசம் பாசம் சூலம் ஆகியவற்றுடன் காட்சி தருகிறாள். இவ்வாறு எடுக்கும் திருமேனிகளும் ஆதிபரா சக்தியாகிய சிவசக்தியின் விஸ்வரூபங்களே.

தேவர்கள் முனிவர்கள் மகரிஷிகள் மனிதர்கள் சர்வ ஜீவராசிகள் அனைத்துக்கும் தாயாகிய பராசக்தி எத்தனை திருமேனிகளைத் தாங்கினாலும் அனைத்தும் விஸ்வரூபங்களே. அவளுடைய திருவடிகளில் சரணாகதி அடைந்து பராசக்தியைப் பக்தி செய்து மனம் வாக்கு காயங்களால் வழிபட்டு அம்பிகையின் அருளைப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ கிருஷ்ண விஸ்வரூபம்

விஸ்வரூபம் என்பது பிரபஞ்ச வடிவம். உலகில் இன்பமும், நன்மையும், அழகும், அன்பும் மட்டும் நிலைத்திருக்கவில்லை. இன்பகரமான இவற்றின் மறு பக்கங்களான துன்பமும் தீமையும் எல்லாம் நடை போடுகின்றன. அவற்றை ஏற்றுக்கொண்டால் தான் நாம் பூரணமானவர்களாக முடியும். பூரணப் பொருளான இறைவனை அடைய முடியும்.

துன்பம் தீமை எல்லாவற்றையும் வாழ்க்கையின் மறுபக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். துன்ப துயரங்க ளிலிருந்தும் தீமைகளிலிருந்தும் விலகி ஓடாமல் அவற்றையும் முன்னேற்றத்திற்கான ஒரு படிக்கல்லாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே பூரண வாழ்க்கை.

குருச்க்ஷேத்திரப் போர்க்களத்தில் பாண்டவர்களும் கௌரவர்களும் போருக்கு அணிவகுத்து நிற்கும்போது, போர் தொடங்குவதற்கு முன்பே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வுடைய விஸ்வரூபம் அருச்சுனனுக்குக் காட்டப்படுகிறது. இது மானிடனுக்குக் காட்டிய விஸ்வரூபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வரூப தரிசனம் பற்றி பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா கூறியிருப்பது பற்றியே இக் கட்டுரையில் எழுதப்படுகின்ற போதிலும் நமது இந்து சமய சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் வேறு பல விஸ்வரூபங்களும் பேசப்படுகின்றன. மேலும் விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் பல விஞ்ஞானிகள் அணுவின் விஸ்வரூபங்களை ஆராய்ந்திருக்கிறார்கள். இவைகளை யும் ஒப்பு நோக்கி மானுட ஜாதிக்கு வழங்க வேண்டு மென்ற ஆதங்கத்தால்

1. கிருஷ்ண விஸ்வரூபம்
2. முருக விஸ்வரூபம்
3. சிவ விஸ்வரூபம்
4. சக்தி விஸ்வரூபம்
5. கணேச விஸ்வரூபம்
6. பசு விஸ்வரூபம்
7. மனித விஸ்வரூபம்
8. அணு விஸ்வரூபம்

என்பவற்றை அறிவதே எனது நோக்கம்.

மானுட தேகத்தோடு வந்தவதரித்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் அருச்சுனனுக்குத் தனது விஸ்வரூபத்தை (திருப்பெரு வடிவத்தைக்) காட்டுகிறார்.

அர்ச்சுனா! தேவர்களின் தலைவர்களான பன்னிரண்டு ஆதித்தர்கள், எட்டு வசுக்கள், பதினொரு உருத்திரர்கள், இரண்டு அசுவினிகள், மருத்துக்கள் என்று பலரையும் காண்பாயாக. அசைவதும் அசையாததுமாகிய உலகம் முழுவதையும் இன்னும் வேறு எதையெல்லாம் பார்க்க விரும்புகிறாயோ அவை எல்லாவற்றையும் இந்த உடம்பில் ஒன்று சேர்ந்திருப்பதைக் காண்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது இந்தக் கண்ணினால் என்னைப் பார்க்க இயலாது. எனவே உனக்குத் தெய்வீகக் கண்ணாகிய ஞானக் கண்ணைத் தருகிறேன் எனது விஸ்வரூப மகிமை யைப் பார்.

ஆயிரம் சூரியர்கள் ஒரே நேரத்தில் ஆகாயத்தில் உதித்தாற் போன்ற திருப்பெரு வடிவத்தைப் பார்த்து அருச்சுனன் வியப்படைகின்றான். கிருஷ்ண பரமாத்மா வுடைய திருமேனியில் எல்லாத் தேவர்களையும், பல்வேறு உயிரினங்களையும் பிரம்மனையும் சிவனையும் எல்லா ரிஷிகளையும் காண்கிறான். எல்லையற்ற கைகளும் வயிறுகளும் வாய்களும் கண்களுமுடைய வடிவத்தை, ஆதி அந்தமில்லாத திருப்பெரு வடிவத்தைக் காண்கிறான். மகுடம் தரித்துக் கதை தாங்கி சக்கரம் ஏந்திய பேரொளிப் பிழம்பாக எங்கும் பிரகாசிக்கின்ற ஆதியந்தமில்லாத திருப்பெரு வடிவத்தைக் காண்கிறான்.

எல்லையற்ற ஆற்றல் உடையவனாக எல்லை யற்ற கைகளை உடையவனாக சந்திர சூரியர்களைக் கண்களாக உடையவனாக சுடர் விடும் அக்கினிபோல் முகமுடையவனாக பரமாத்மாவைக் காண்கிறான். விண்ணும் மண்ணும் எல்லாத் திசைகளும் திருமேனியில் வியாபித்திருப்பதைக் காண்கிறான்.

தேவாதி தேவா! பயமுறுத்துகின்ற கோரப் பற்களை உடையதும், பிரளயகால அக்கினிக்கு ஒப்பானதுமான உனது முகங்களைக் கண்டதும் என் மனம் நிலை குலைந்து விட்டது. எனக்கு அருள் புரிக. திருதராட்டிர னுடைய பிள்ளைகள், பீஷ்மர், துரோணர், கர்ணன், நம்மவர்களுள் முக்கிய வீரர்கள் என்று அனைவரும் உனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்களில் பரபரப்பாகப் புகுந்து உனது பல் இடுக்குகளில் அகப்பட்டுக் கிடக்கிறார்கள். நதிகள் வேகமாகக் கடலை நோக்கிப் பாய்வதுபோல இவர்கள் அழிவதற்காகவே உனது வாய்களில் வேகமாகப் புகுகின்றார்கள்.

பகவானே! உலகங்கள் அனைத்தையும் உனது வாய்களால் விழுங்கி ருசி பார்க்கிறாய். உனது உக்கிரமான ஒளி எல்லா உலகத்தையும் பிரகாசத்தால் நிரப்பியபடி எரிகிறது. பயங்கர உருவமுடைய நீ யார்? என்று எனக்குச் சொல்வாயாக. உனது செயல்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உன்னை வணங்குகிறேன். உன்னை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

உனது மகிமையால் உலகம் மகிழ்கிறது, ஆனந்தமடைகிறது. அரக்கர்கள் பயந்து திசைதோறும் ஓடுகிறார்கள். சித்தர்கள் அனைவரும் வணங்குகிறார்கள். நீ முழுமுதற் கடவுள். பழமைக்கெல்லாம் பழமையான வன். பிரபஞ்சத்தின் மேலான இருப்பிடம். எண்ணற்ற வடிவங் களை உடையவன். அறிபவனும் அறியப்படு பொருளும் நீயே. உலகம் உன்னாலேயே வியாபிக்கப் பட்டுள்ளது. நீயே வாயு, எமன், அக்கினி, வருணன், சந்திரன், பிரஜாபதி மற்றும் எல்லாமாய் இருக்கிறாய்.

ஒப்பற்ற பெருமை உடையவனே! அசைவதும், அசையாததும் நிறைந்த இந்த உலகத்தின் தந்தை நீயே. பூஜிக்கத் தக்கவனும் மேலான குருவும் நீயே. உன்னை விட உயர்ந்தவர் யார் இருக்க முடியும். உலகின் இருப்பிடமானவனே! முன்பு காணாததைக் கண்டு மகிழ்கிறேன். ஆனாலும் பயத்தால் என் மனம் நடுங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமை ததும்பும் அந்தப் பழைய உருவத்தை எனக்குக் காட்டி அருள் புரிய வேண்டும்.

ஆத்மனே! இத்தகைய எனது விஸ்வரூபத்தைப் பூமியில் உன்னைத்தவிர வேறுயாரும் வேதங்களாலே யாகங்களாலோ தானங்களாலோ, கிரியைகளாலோஈ தீவிர தவங்களாலோ காண இயலாது.

எனது விஸ்வரூபத்தைப் பார்த்து உனக்குப் பயமோ மனக் குழப்பமோ வேண்டாம்.

விஸ்வரூப தரிசனத்தை தெய்வீகக் கண்கொண்டுதான் காணவேண்டும். பௌதிகப் பரிமாணப்படி ஒரு குறிப்பிட்ட தூரத்துக்கப்பால் நமது கண்களால் காண முடியாது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் நமது காதுகளால் கேட்க இயலாது. இது போலவே ஒவ்வொரு புலன்களும். அதுமட்டுமல்ல, குறிப்பிட்ட அதிர்வு எல்லைகளுக்கு வெளியே உள்ள ஒளியையோ ஒலியையோ அவை நமது அருகில் இருந்தாலும் காணவோ கேட்கவோ முடியாது. எனவே புலன்களின் செயற்பாட்டு வட்டம் மிகவும் குறுகியது.

பார்ப்பவற்றையும் கேட்பவற்றையும் உண்பவற்றை யும் கூட புலன்களால் உள்ளதை உள்ளபடி அறிய இயலாது. ஒரு சாதாரணப் பூவை எடுத்துக் கொள்ளுங்கள் இது ஒரு எல்லைக்குள் உட்பட்டதுதான். ஆனால் இந்தப் பூவைப் பற்றியெல்லாம் தெரியும் என்ற அறுதி நிலையை அடைவது சாத்தியமேயன்று. ஆராய்ச்சியின் ஆரம்பத்தில் எல்லை உள்ளதாகத் தோன்றி பூ இப்போது எல்லையற்ற தாகி விட்டது. நமது எல்லை மிகவும் குறுகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையற்றவற்றை எல்லையுள்ளவை யாக நாம் கண்டுகொண்டிருக்கிறோம். எந்தப் பொருளையும் அதன் உண்மை நிலையில் நாம் காணமுடிவதில்லை. எனவே உண்மையை அறிய வேண்டுமானால் இந்தப் புலன்களும் மனமும் போதாது. அவற்றுக்கு மேலான ஒன்று வேண்டும். அதுவே தெய்வீகப் பரிமாணம். தெய்வீகக் கண்.

தெய்வீகக் கண் என்பது நமது உணர்வு நிலையில் ஒரு மாற்றம். புத்தியின் விளிப்பு. கண்களோ காதுகளோ இல்லாமல் காணவும் கேட்கவும் முடியும். இதற்குக் கனவு நிலையை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். கனவில் நமது புலன்கள் எதுவும் செயற்படு வதில்லை. ஆனாலும் அங்கே நாம் காண்கிறோம், கேட்கிறோம், உணர்கிறோம். நனவு நிலையில் புலன்கள் வாயிலாக நிகழ்பவை அனைத்தும் கனவு நிலையில் இந்தப் புலன்கள் இன்றியே நிகழ்கின்றன. அதுபோல உள்ளதை உள்ளபடி காண்கின்ற நிலைக்கு தமது உணர்வுநிலை மாற்றப்படுவதையே தெய்வீகக் கண் என்று கூறப்பட்டுள்ளது. இது பக்தனின் உயர்நிலைச் சாதனை.

விஸ்வரூப தரிசனம் என்று இங்கே காட்டப் பட்டுள்ளது என்ன? அழிவின் ஒரு காட்சி. சாதாரணமாக தீமை, துன்பம், அழிவு இவற்றைப் பார்க்கும் போது இவையெல்லாம் ஏன் உலகில் இருக்கவேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால் விழிப்புற்ற புத்தி என்ற தெய்வீகக் கண்ணால் பார்க்கும்போது அவை இறைவனின் மகிமை ஆகின்றன.

இறைவனின் இன்பகரமான மகிமைகளைத் தியானிப்பதால் புத்தி விழிப்புறுகிறது. தெய்வீகக் கண் தோன்றுகிறது. அதன் வாயிலாகப் பார்க்கும்போது துன்பம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமை அனைத்தும் இறைவனின் மகிமையாகத் தெரிகின்றன. இதுவே பக்தனின் உயர்நிலைத் தியானம்.

விஸ்வரூப தரிசனத்தைப் பெறுவது என்ன? வாழ்க்கையின் கோரமான மறுபக்கத்தை ஏற்றுக் கொள்வது. அவ்வாறு வாழ்க்கையின் மறு பக்கத்தையும் ஏற்றுக் கொண்டு முன்னேற யாகம், தானம் போன்ற கிரியைகளை விட பக்தியே சிறந்த வழி.

பக்தி எவ்வாறு பண்ணப்படுகிறது என்பதை சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார். அனைத்தையும் தன்னுள் ஈர்த்துக் கொள்ளுகின்ற இந்தத் தீவிரமான அன்பினால் (விஸ்வரூபத்தால்) நமக்கு இறைவனிடம் பரிபூரணமான சரணாகதி நிலை ஏற்படுகின்றது. அதாவது வாழ்க்கையில் எது நடந்தாலும் அது தனக்கு எதிரானதல்ல என்ற திடநம்பிக்கை உண்டாகிறது. இந்த நிலையில் துன்பம் வரும்போது அதனை வருக வருக என்று வரவேற்கிறான் பக்தன். துயரமே நீயும் எனது இறைவனாகிய தந்தையிடமிருந்தல்லவா வருகிறாய். மரணம் வந்தாலும் நீயும் இறைவனிடமிருந்தல்லவா வருகிறாய் என்று புன்சிரிப்போடு ஏற்றுக் கொள்கிறான் பக்தன். இன்ப துன்பங்களுக்கிடையில் வேறுபாடு காண்பதில்லை. அன்பே வடிவான இறைவன் மீது சரணாகதி அடைந்திருக்கும் பெருநிலை உண்மையிலேயே மிகவும் மேலானது. இதுவே விஸ்வரூப தரிசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பசு விஸ்வரூபம்

இந்துக்களால் கோமாதா என்று பூஜிக்கப்படும் விலங்கு பசு. பூச்சி புழுக்கள்முதல் மனிதப் பிறவி வரையுள்ள ஜீவராசிகளில் சில மிருகங்களும், பறவை களும், ஊர்வனவும் தெய்வங்களுக்கு வாகனங்களாகக் கொள்பவர்களும் இந்துக்களே.

கிருஷ்ண விஸ்வரூபம் சிவ விஸ்வரூபங்கள் பற்றிய வரலாறுகளை புராண இதிகாசங்களில் படித்தறியும் போது மகரிஷிகளின் ஞானக் கண்ணுக்குத் தெரிந்த பசு விஸ்வரூபத்தையும் புராணங்களில் படிக்கமுடிகிறது. அது பற்றிய சில செய்திகளை அபிதான சிந்தாமணி யிலிருந்து எடுத்துத் தரவிழைக்கின்றோம்.

விஸ்வரூபம் என்றால் என்ன? என்பதை இதற்கு முன்னே கூறிய விஸ்வரூபங்களில் விளக்கியுள்ளோம். சில விஸ்வரூப விளக்கத்தில் தெய்வங்களும் தெய்வீக ஆற்றல்களும் எல்லாம் சிவலிங்கத்துள் உள்ளடங் காற்றலாக அமைந்திருப்பது போல பசு விஸ்வரூபத்திலும் ஆற்றல்களை வழங்கும் தெய்வங்களும் இயற்கைச் சக்திகளும் உள்ளடங்காற்றலாக இருப்பதை மகரிஷிகள் தமது ஞானக்கண்களால் கண்டறிந்து கூறியவற்றை இங்கே தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலை என்பது ஒரு தெய்வப் பசு. இது அக்கினி தேவனுக்குத் தனது உடலில் வசிப்பதற்கு இடங் கொடுத்துத் தேவர்களால் புண்ணியப் பேறு பெற்றது. இது ஐந்து வகைப்படும். அவை நத்தை, சுபத்திரை, சுரபி, சுசிலை, சுமனை எனப்படும். அவற்றுள் நத்தை கபிலநிறம் சுபத்திரை கருமைநிறம் சுரபிஅழகிய வெள்ளை நிறம். சுசிலை புகை நிறம் சுமனை தாமிரநிறம். இவைகள் தேவபூஜை முதலியவற்றுக்கு உதவியாய் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் முதலிய பஞ்ச திரவியங்களையும் கோரோசனையையும் தருவன.

பசுவின் உடம்பினுள் தெய்வங்களும் தேவர்களும் பரந்து உறைகின்றனர் என்பது பற்றி ஒரு தேவாரத்தில் காண்கிறோம்.

''மாதனத்தை மாதேவனை மாறிலாக்
கோதனத்தில் ஐந்தாடியை வெண்குழைக்
காதனை கடுவாய்க்கரைத் தென்புத்தூர்
நாதனைக் கண்டு நானுய்யப் பெற்றேனே''

என்று திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரத்தில் கோதனத்தில் ஐந்து என்று பசுவின் மூலமாகக் கிடைக்கும் பஞ்ச திரவியங்களை எடுத்துக் கூறியுள்ளார்.

பால், தயிர், நெய், கோசலம், கோமயம் இவை ஐந்தும் முக்கண்களையுடைய சிவபெருமானுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் அபிஷேக திரவியமாக பயன்படுத்தப்படும் புனித திரவியங்களாகும் இவற்றைத் தருவது பசு.

பசுக்களின் தேகத்தில் தேவர்கள் விரும்பி வாழ்கிறார்கள். என்பதை மகரிஷிகள் தமது ஞானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களால் கண்டார்கள். இவற்றின் கோம்புகளின் நுனியில் தீர்த்தங்கள் அனைத்தும் தங்கும். சிரத்தில் சிவமூர்த்தியும், நடுநெற்றியில் பராசக்தியும், மூக்கின் நுனியில் கந்த மூர்த்தியும், மூக்கிற்குள் இந்திரனும், கன்னங்களின் நடுவில் அசுவினி தேவர்களும், இரண்டு கண்களிலும் சூரிய, சந்திரரும், தந்தத்தில் வாயுவும், நாவில் வருணனும், நெஞ்சில் சரஸ்வதியும், கழுத்தில் இயமனும் இயக்கர்களும், உதட்டில் சந்தியா தேவர்களும், முசுப்பில் அருக்கத் தேவரும், மார்பில் சாத்தியரும், நான்கு கால்களிலும் வாயுவும், முழங்காலிலும் குளம்பின் நுனியிலும் மருத்துவரும், குளம்பின் மேல் அரம்பையரும், முதுகில் உருத்திரரும், சந்துகளில் அட்ட வசுக்களும், யோனியில் சப்தமாதர்களும், அபானத்தில் திருமகளும், அடிவயிற்றில் நாகாதியரும், வாலின் ரோமத்தில் ஆதித்தரும், கோசலத்தில் ஆகாய கங்கையும், கோமயத்தில் யமுனையும், உரோமங்களில் மாதவரும், அடிவயிற்றில் பூமி தேவியும், கன்னத்தில் எல்லாச் சமுத்திரங்களும் வயிறு, இதயம், முகம், இம்மூன்றிலும் காருகபத்தியம் முதலிய முத் தீர்த்தங்களும், பொருந்தியிருந்து வாழ்கின்றனர்.

இப்பசுக்களைப் போஷிப்பவர்கள் சிவகதி யடைவார்கள் பசுக்களை அடித்தால் நரகத்தை அடைவார்கள். திருப்பாற்கடலைக் கடைந்த போது இலக்குமியும் மூத்தவளும் தோன்றினர். மூத்தவள் மூதேவி. மூத்தவள் சிவபெருமானிடம் சென்று நான் எங்கே வசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அப்போது சிவபெருமான் நீ சென்று பசுக்களின் முகத்திலும் பெண்களின் மூக்கிலும் இரு என்றாராம். அவள் அங்கே அமர்ந்திருந்தாள். இதனாலேயே கோபூசை செய்யும் போது தீபாராதனையை முகத்திற்குக் காட்டுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாலெட்சுமி வாசஞ்செய்யும் பிரஷ்டத்துக்கே காட்டி வழிபாடு செய்வார்கள்.

பெண்கள் மூக்குக் குத்தி தங்க மூக்குத்தி அணிவதால் அவர்களுக்கு மூத்தவளின் தோஷம் விலகிவிடும். பசுவின் மேனியில் வாசஞ்செய்யும் தேவுக்களெல்லாம் பசுவின் விஸ்வரூபமாக, உள்ளடங்காற்றலாய் அமைவதால் பசுவிஸ்வரூபத்தைப் பௌராணிகர்கள் விளக்கியுள்ளார்கள்.

இத்தகைய விஸ்வரூபத்தைக் கொண்ட பசு என்னும் புனித ஜீவனுடைய உடலில் கடவுளும் தேவர்களும் தீர்த்தங்களும் விரும்பி அமர்த்துள்ளார்கள் என்று விஷ்ணுதர்மோத்தர புராணம், அக்கினிபுராணம் என்பன கூறுகின்றன.

பசுக்கள் எல்லாவகை உணவுத் தானியங்களின் உற்பத்திக்கு ஆதாரசக்தியாக விளங்குகின்றன. வேள்வி செய்வதற்குத் தேவையான பால், தயிர், வெண்ணெய் நெய் கோசலம், கோமயம் முதலிய திரவியங்களைத் தருகின்றன.

அந்தணர்கள் முனிவர்கள் மகரிஷிகள் செய்யும் யக்ஞம், அக்கினி கோத்திரம் முதலிய வைதிகச் சடங்குகளில் அக்கினியில் அவிசாகச் சொரியும் திரவியங்களைத் தருவன பசுக்கள். அவைகள் செல்வச் செழிப்புக்கு மூல காரணமாக இருக்கின்றன.

தேவலோக பசுவான காமதேனுவின் வழித் தோன்றல்கள் பசுக்கள். வேதியர்களிடம் வேதம் இருக்கின்றது. பசுக்களிடம் யக்ஞத்திற்குத் தேவையான திரவியங்கள் இருக்கின்றன. பசுக்கள் புனிதமானவை. தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் இடத்தையும் சுற்றுச் சூழலையும் புனித்படுத்து வதால் பசுக்களை வணங்குகின்றேன். இந்த உலகச் சாத்வீக தேவதைகள், அந்தணர், பசுக்கள் மகாத்மாக்கள், கற்புடை மங்கையர்கள் ஆதலால் அவர்களை வணங்குகின்றேன் என்று விஷ்ணு தர்மோத்திரம் கூறுகின்றது.

விஷ்ணு தர்மோத்திர புராணத்தில் ''கோமதீம் தீர்த்தயிஷ் யாமி சர்வபாவப்ரணாஸிநீம்'' என்று தொடங்கும் மந்திரத்தில் பசுவைப் பற்றியும், அதை வழிபடவேண்டிய அவசியத்தைப் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

உலகத்தின் மிகத் தொன்மையான வேத சங்கிதையிலும் உபநிஷத்துகளிலும் பசுவின் பெருமை, பசுவைப் பாதுகாத்தல், பராமரித்தல் ஆகியவற்றையும் அதன் பலாபலன்களையும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.


பசுக்களைத் தரிசித்தல், பூஜைசெய்தல், வணங்குதல் தீவனம் கொடுத்தல், நீர் காட்டுதல், முதலிய சேவைகளினால் மனிதன் உயர்ந்த சித்திகளை அடைகிறான்.

பகவான் கிருஷ்ணர், பஞ்சபாண்டவர்கள், பேரரசனான திலீபன், அவனுடைய குலத்தவனான ரகு முதலியவர்களும் மகரிஷி வசிஸ்டரும் பசுசேவை செய்து பெற்ற பெரும் பேறுகளை இதிகாசங்கள் கூறுகின்றன.

இப்பேற்பட்ட பசுவர்க்கத்தை இரக்கமின்றிக் கொன்று புசிக்கின்றார்களே. கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என்று வள்ளுவர் கூறினாரே. ஆதலால் எங்களை வெட்டிக் கொன்று தின்னாதீர்கள் என்று கெஞ்சிக் கேட்கின்றது பசுவர்க்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனித விஸ்வரூபம்

ஒவ்வொரு மனிதனும் பண்புவளமும், ஒழுக்கவளமும் ஆன்மீக வளமும் இயல்பாகவே உடையவனாயிருக்கிறான். அவை அவனுடைய பிறப்புரிமை. அன்பு, அகிம்சை, சத்தியம், சாந்தி, சமாதானம், நல் ஒழுக்கப் பண்புகளும், மனிதநேயம் முதலியனவும் மனிதனை மனிதனாக வாழ வைத்துத் தெய்வமாகவும் உயர்ந்தவல்லன. இந்தச் சீரிய குணங்கள் உடையவனாயிருப்பதே மனிதனது சுயரூபம்.

தன்னுள்ளே இருக்கின்ற இந்தச் சீரிய குணங்களையும் ஆற்றலையும் உணர்ந்து கொள்ளாமல், காமம், குரோதம், லோபம் மோகம், மதம், மாற்சரியங்களுக்கு அடிமையாகி துன்பச் சுமைகளையும், நெஞ்சக் கனதிகளையும் தாங்கி வாழத் துடிப்பவர்களாக பலர் உள்ளனர். அவர்களில் அவா, ஆசை, பற்று, வேகம், அகங்காரம், அங்கலாய்ப்பு, சுயநலம் உடையவர்க ளாகவும் சில மனிதர்கள் வாழ்கின்றார்கள். வஞ்சனை பொறாமை கோபம், கொலை, களவு முதலிய தீய குணங்கள் உடையவர்களாகவும் சிலர் வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களிடம் ஏற்படும் அறிவுப் போராட்டத்தின் போது மனிதனது உணர்வில் ஏற்படும் மாற்றங்கள் அவனுடைய உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுத்தும் அதிர்வுகளே அவனுடைய கண்ணிலும், கருத்திலும், வாக்கிலும், செயலிலும் வெளிப்படுகின்றது.

உதாரணமாகக் கோபக்குணத்தை எடுத்துக் கொள்வோம். இதனைச் ''சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி'' என்கிறார் திருவள்ளுவர். இது மனிதனிடமுள்ள மிருக உணர்வின் வெளிப்பாடாகும். இதனை விலங்குமனம் என்று குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர். சினம் பொங்கி எழும்போது மனிதன் மிருகமாகிறான். மிருக உணர்வும் மிருகக் குணமும் தற்காலிகமாகவே மனிதனிடம் இடம் பெறுகின்றது. அந்தச் சொற்ப நேரத்திற்குள் சினம் மனிதரைப் படாதபாடு படுத்துகின்றது. மனிதன் தன்வயமிழந்து விடுகின்றான். அவனுடைய செயற்பாடுகள் அவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டு விடுகின்றன.

ஒரு நல்லாசிரியர் மாணவர்களுக்குக் கற்பித்துக்கொண்டிருக்கும் போது ஒரு மாணவனுடைய தவறுகளைச் சுட்டிக் காட்டி மற்ற மாணவர்களுக்கு முன்னிலையிலேயே கோபமிகுதியினால் தண்டித்து விட்டார். அப்போது கோபம் விஸ்வரூபம் எடுத்திருந்தது. பொறுமை இழந்த ஆசிரியரின் கோபக்குணம் அவருடைய விஸ்வரூபம். வீட்டுக்குச் சென்ற ஆசிரியரின் கோபம் தணிந்த பின் மனித விழுமியங்களான இரக்கம், கருணை, காருண்ணியம், அன்பு தயை என்பன ஆசிரியரின் உள்ளத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றது. அடுத்தநாள் வகுப்புக்குச் சென்ற ஆசிரியர் குறிப்பிட்ட மாணவனை அணுகி அவனை அன்போடு அணைத்து கண்ணீர் மல்கி ஆதரவு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது ஆசிரியரின் கோப விஸ்வரூபம் மறைந்து சுயரூபம் ஒளிவிட்டுப் பிரகாசித்தது. இந்த நிகழ்ச்சியில் கோபாவேசத்தினால் ஆசியரிடமேற்பட்ட விஸ்வரூபம் ஆசிரியரின் விஸ்வரூபமாக அமைகின்றது.

விளையாட்டு வினையாகிவிடக்கூடாது என்று பெரியோர்கள் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். எத்தகைய விளையாட்டுகளும், விளையாட்டாகச் செய்யப்படும் செயல்களும் பிறரை வருத்துவதாகவோ, துன்புறுத்துவதாகவோ அவர்களின் சுதந்திரத்தைப் பாதிப்பதாகவோ இருத்தலாகாது.

ஒரு எடுத்துக் காட்டு. பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேரும், மாணவர்களைப் பழைய மாணவர்கள் விளையாட்டாகத் துன்புறுத்துவது ஒருவகை நாகரீகமாகி விட்டதை நாம் அறிகிறோம். பூனைகள் எலியைப் பிடித்து அடித்தும் கடித்தும் வருத்தி முடிவில் கொன்று விடுகின்றன. அதுபோல புதிய மாணவர்களைப் பழைய மாணவர்கள் பகிடிக்காக அடிப்பதும் துன்புறுத்துவதும் முடிவில் பகிடிவதையாகி விடுவதையும் செய்திப் பத்திரிகைகளில் படிக்கின்றோம். பகிடிவதை உயிர்களிடத்தில் இரக்கமில்லாமல் செய்யும் கொடுஞ் செயலாகும்.

இரக்கம், கருணை, தயை, ஜீவகாருண்ணியம் எனப்படும் மனித விழுமியங்கள் ஒரு மனிதனின் உள்ளுணர்வில் பிரகாசிக்கும் போது அவன் மனிதனாய் இருக்கிறான் மிருக சுபாவங்கள் மனிதனிடம் வெளிப்படும் போது அவன் மிருகமாகிறான். இது அவனுடைய விஸ்வரூபமாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நெருக்கமாக வாழும் ஒரு கிராமத்தில் எதிரும் புதிருமாகவுள்ள இரண்டு வீடுகளில் இருவர் குடியிருந்தனர். ஒருவன் மற்றவனுடைய வளர்ச்சியையும் செல்வத்தையும் பார்த்தும் கேட்டும் பொறாமை கொண்டான். அப்படியாக அவன் பொறாமைப்படுவதை மற்றவன் அறிந்திருந்தான்.

அக்கிராமத்தில் ஓர் சிற்றாறு. அதன் அருகே ஒரு முருகன் கோவில் முன்னவன் முருகன் கோயிலுக்கருகில் இருந்து தினமும் தியானம் செய்வான். பொறாமை கொண்ட மற்றவன் யோசித்தான். எனது எதிர் வீட்டுக்காரன் முருகனிடம் என்ன கேட்பான். மேலும் மேலும் சொல்வதைத்தானே கேட்பான். அவனுக்குக் கொடுப்பதைப் போல எனக்கு இரண்டுமடங்கு தரவேண்டுமென்று பொறாமைப்படுபவன் முருகனை நினைத்துத் தியானம் செய்து வேண்டிக் கொண்டான். இவன் பொறாமைப்படுவதை அறிந்திருந்த மற்றவன் தனக்கு ஒரு கண் குருடாக வேண்டும் என்று முருகனை வேண்டிக் கொண்டான். வேண்டுவார் வேண்டுவதைக் கொடுக்கும் முருகன் அவர்கள் வேண்டிக் கொண்டபடி அருள் புரிந்தார். இதனால் பொறாமை காரணமாக மற்றவன் இரண்டு கண்களையும் இழந்து குருடனாகி, பொறாமையின் விஸ்வரூபமாக விளங்கினான்.

அன்பு, தயை, இரக்கம், கருணை, ஜீவகாருண்ணியம், அடக்கம், பணிவு, குருபக்தி, பெற்றோரைப் பெரியோரைக் கனம் பண்ணுவது, தெய்வபக்தி முதலிய நற்குணங்கள் ஒரு மனிதனிடம் வெளிப்படும் போது அவை மனிதனுடைய சுயரூபமாக அமைகின்றன. ஜீவகாருண்ணியமே வடிவான இராமலிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளலார் ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று கூறினார். அது அவருடைய சுயரூபம்.

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், கொலை களவு, கொள்ளை, கள்ளுண்ணல், பொறாமை, வஞ்சனை, சூது, பிறன்மனை நயத்தல் பேராசை முதலிய தீய குணங்கள் ஒரு மனிதனுடைய உள்ளத்தை ஆக்கிரமிக்கும் போது அவனுடைய உள்ளத்து உணர்வின் வெளிப்பாடுகள் உடலிலும், செயலிலும், பேச்சிலும் விகாரமாக வெளிப்படுகின்றது. அப்போது அது அவனுடைய விஸ்வரூபமாக அமைகின்றது.

இந்த விஸ்வரூபம் வெளிப்படுவதற்குக் காரணமாய் அமைந்தது காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குணங்களும், மனம், புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங்களும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளும் ஒரு மனிதனுடைய உடலில் உள்ளும் புறமும் இருக்கின்றன. இந்தப் பன்னிரண்டும் ஜீவாத்மாவின் பகைப் பொருட்களாக அமையும் போது அந்த மனிதன் விஸ்வரூபம் கொள்கிறான். இந்தப் பன்னிரண்டையும் திருமூலர் திருமந்திரத்தில் அழகாகச் சித்தரிக்கிறார்.

> ''திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
> நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
> வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன்று ஐந்து
> பகைக்கின்ற நெஞ்சுக்குப் பானிரண்டாமே''
>
> (தி.ம.2174)

எத்தனை கோடி மக்கள் இருக்கிறார்களோ அத்தனை கோடி விஸ்வரூபங்கள் மனிதர்களிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. உதாரணமாக பஞ்ச பாண்டவர்களின் நாட்டைக் கவர்ந்துகொள்ளப் பேராசைப்பட்ட துரியோதனனின் பேராசை அவனுடைய விஸ்வரூபமாக அமைந்தது. அதனால் எவ்வளவு அனர்த்தங்கள் நிகழ்ந்தன. அவனுடைய விஸ்வரூபம் மகாபாரதப் போரில் முடிந்தது.

ஒரு ஏழை வழிப்போக்கன் ஊரூராகப் பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்தான். ஒரு நாள் அவன் உணவின்றிக் களைத்துப்போய் அவன் வந்த வழியிலுள்ள ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான் அவ்வழியே வந்த முனிவர் ஒருவர் அவன்மீது இரங்கி மகனே! நீ களைப்போடு ஓய்ந்து சாய்ந்திருக்கும் இந்த மரம் கற்பகதரு இது நீ விரும்பிக் கேட்பதை எல்லாம் தரவல்ல தேவதாரு என்று கூறிச் சென்றார்.

முனிவர் சென்ற பின் வழிபோக்கன் சிந்தித்தான். பசியோடு இருக்கும் எனக்கு இந்த மரம் உணவு தருமா? என்று நினைத்தான். உடனே அவனுக்கு முன்னே அறுசுவை உணவும் வந்திருந்தது. ஆசையோடு அள்ளிப் புசித்து மகிழ்ந்தான். உண்டகளை தொண்டருக்கும் உண்டு. ஆதலால் களைப்பாறுவதற்கு நல்ல படுக்கை தரவேண்டும் என்று நினைத்தான். நல்ல பட்டு மெத்தையோடு கட்டில் ஒன்று வந்தது. அதில் ஏறிப் படுத்துக் கொண்டான். மகிழ்ச்சியோடு மேலும் ஆசைப்பட்டு எனது களைப்பை ஆற்றி ஆதரிக்க ஒரு மனைவி கிடைக்க வேண்டுமென்று நினைத்தான். அப்சரஸ்போல வடிவுடைய ஒரு பெண் தோன்றி அவனுக்குக் கால்பிடித்து விசிறிக்கொண்டிருந்தாள். பெரு மகிழ்ச்சியடைந்த வழிப்போக்கன் தான் இருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள காட்டைச் சுற்று முற்றும் பார்த்தான் ஆசை பேராசையாக வடிவெடுத்திருக்கும் அவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்வரூபம் பெற்றதை இழக்க மனமில்லாமல் கவலைப்பட்டு இந்தக் காட்டிற்குள் இருந்து புலி வந்தால் என்ன செய்வது என்று நினைத்தான். புலியொன்று வந்து அவனை அடித்துக் கொன்றுவிட்டது.


ஆசைப் படப்படத் துன்பம். ஆசையை விடவிட இன்பம். ஒரு மனிதனிடத்தில் எழும் பேராசை அவனுடைய விஸ்வரூபமாக அமைகிறது. சில தீய குணங்களின் பலனைப் பார்த்தோம். எந்தத் தீய குணங்கள் ஒரு மனிதனிடத்தில் முனைப்பாக எழுகின்றதோ அப்போது அந்த மனிதன் விஸ்வரூபம் எடுக்கிறான்.

''ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவதில்லை நமனும் அங்கில்லை
இடும்பையுமில்லை இராப்பகல் இல்லை
படும்பயன் இல்லை பற்று விட்டோர்க்கே''
(தி.ம. 1598)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## அணு விஸ்வரூபம்

அணுவின் விஸ்வரூபம் இப்பிரபஞ்சம். இன்றைய காலகட்டத்தின் வளர்ச்சியில் உச்சியில் இருக்கும் மக்கள் வேதாந்தம் சித்தாந்தம் மெய்ஞானம், ஆத்மஞானம் என்றால் ஏதோ பண்டைக்காலப் பதிவேடுகளில் கிடக்கும் கிடக்கைகள் என எண்ணி அதில் ஈடுபாடோ அக்கறையோ கொள்வதில்லை.

விஞ்ஞானிகள் எதைச் சொல்கிறார்களோ அதுதான் உண்மையென ஏற்கும் பக்குவத்தில்தான் இருக்கிறார்கள். விஞ்ஞானிகளின் வாக்கினையே தேவவாக்காகக் கொள்ளும் நாகரீக மக்களுக்கு அந்த விஞ்ஞானியும் தனது ஆராய்ச்சியினை ஒரு எல்லைக்கப்பால் தொடரமுடியாமல் மெய்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டே தொடர நினைக்கிறான் என்பது புரியாமல் இருக்கலாம்.

இப்பிரபஞ்சத்தின் மர்மத்தினைக் காண முற்பட்ட நவீன விஞ்ஞானி தனது கண்டுபிடிப்புக்களாலான கருவி சாதனங்களால் ஆராய்ந்து அவற்றிற்கும் எட்டாத, கண்டறியாத ஒன்று இருப்பதாக உணர்ந்து ''குவாண்டத் தத்துவம்'', 'மகா இழைத் தத்துவம்' என்ற ஆராய்ச்சிக்குத் தான் உந்தித் தள்ளப்படுகிறான். இந்த விஞ்ஞானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளைவிட அரிய மெய்ஞான உண்மைகளையும் அறியவேண்டும். வளர்ந்துபோகும் விஞ்ஞானம், ஏற்கனவே வளர்ந்துவிட்ட மெய்ஞானந்தான் என்பதனை ஆய்வுச் சிந்தனையோடு கற்று அறிய வேண்டும்.

வானவெளியில் பல்லாயிரங்கோடி கில்லோ மீட்டர்களுக்கு அப்பாலுள்ள பல்வேறு கோள் மண்டலங்கள் அனைத்தையும் சேர்த்து 'அண்டப் பகுதி என்றும் 'உண்டைப் பிறக்கம்' என்றும் மாணிக்கவாசகர் கூறுவது இன்று நாம் வியந்து மெய்மறந்து நிற்கச் செய்யும் சொற்களாகும். விண்ணில் காணப்படும் கோள்களை (SPHERE) உண்டை என்ற சொல்லினால் எட்டாம் நூற்றாண்டிலேயே குறிப்பிட்டது நம்மை மேலும் வியக்கச் செய்கின்றது. விண்வெளியில் காணப்பெறும் இந்த உண்டைகள் விரிந்து கொண்டே செல்கின்றன என்ற கருத்தை 'பிறக்கம்' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். ஆகவே இந்த உண்டைகள் ஓயாது சலித்துக் கொண்டிருக்கின்றன என்பதும் ஒன்றைவிட்டு ஒன்று பல்வேறு கோணங்களில் பிரிந்து செல்கின்றன என்பது பிறக்கம்' என்ற சொல்லால் பெறவைக்கப்படுகிறது.

இப் பிரபஞ்சத்தின் எல்லையற்ற தன்மையும் அதில் நிகழ்கின்ற எண்ணரிய அண்ட சராசரங்களின் செயற்பாடுகளும் அவற்றின் தோற்றத்திற்கும் வாழ்விற்கும் அழிவிற்கும் காரண காரியமாயுள்ள மர்மங்களும் அணுவின் விஸ்வரூபமாக வரிந்து பரந்து ஒடுங்கியிருப்பதை நினைவிற் கொண்டு அணுவின் விஸ்வரூபத்தை அறியமுற்படுவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறியப்பட்ட பல புதுமைகளை எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்க வாசக சுவாமிகள் திருவண்டப் பகுதியில் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடி மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் நுண் அணுப் புரைய
சிறிய ஆகப் பெரியோன்......................

இறைவனின் மகிமையை அறிவிப்பதற்கு மாணிக்க வாசகர் இவற்றைக் கூறினாரெனினும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறியப்பட்ட பல விஞ்ஞானப் புதுமைகளை இவ்வடிகளில் இடம் பெற்றுள்ளன. அண்டம், உண்டை, பிறக்கம், விரிந்தன, நுண்அணு ஆகிய சொற்களே இந்த நூற்றாண்டின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை அறிவிக்கும் சொற்கள் ஆகும்.

மாணிக்கவாசகர் காலத்தில் அணு என்ற சொல் பல பொருள்பட வழங்கிய ஒரு சொல்லாகும் கட்புலனாகும் சிறு துகள்கள், கருத்தால் மட்டும் காணக்கூடிய நுண் பொருள் என்பவையும் அணு என்ற சொல்லாலேயே அந்நாளில் குறிக்கப்பெற்றன. இதில் வியப்பு என்னவென்றால் பத்தொன்பதாம் நூற்றாண்டு விஞ்ஞானம் கூறும் அணு (ATOM) என்ற சொல் எந்தப் பொருளில் வழங்குகின்றதோ அந்தப் பொருளும் மாணிக்கவாசகர் கூறும் அணு என்ற சொல்லுக்கும் உண்டு. இன்று கூட அணுவை யாரும் கண்ணாலே கண்டதில்லை. மிகச் சக்தி வாய்ந்த மின்னியற் பெருக்காடி (பூதக் கண்ணாடி) மூலம் கூட அணுவைப் பார்க்க முடியாது. அப்படியானால் சாதாரண மனிதர்கள் அணுவின் வடிவை எவ்வாறு கருத்தில் கொள்ள முடியும்.

மாணிக்கவாசகர் கூறிய 'நுண்ணனுப் புரைய' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமை அணுவைப்பற்றி அறிந்து கொள்ளப் பேருதவி புரிகின்றதன்றோ.

பேரியக்க மண்டலத்தில் கோடிக்கணக்காண அண்டங்கள் சூரியனைப் போன்ற கோள்கள் இயங்கிக் கொண்டிருப்பதை அறிகிறோம். ஒவ்வொரு கோளும் (Plants) எவ்வளவு எடை இருக்கும். பிரபஞ்சத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் எல்லாக் கோள்களையும் கூட்டிப் பார்த்தால் எவ்வளவு எடையிருக்கும். இவ்வளவும் பேரியக்க வெளியில் இயங்குவது சர்வவல்லமையுடைய ஒரு சக்தியினால்தான், (ALMIGHTY) என்பது ஐயமின்றி விளங்குகின்றதல்லவா?

இந்தச் சக்தி ஆங்கிலத்தில் (GRAVITY) ஈர்ப்புச் சக்தி என்றும், சமஸ்கிருதத்தில் பூரணம் என்றும், தமிழில் வற்றா இருப்பு (பிரம்மம்) என்றும் வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சக்தியினால் ஆழாழி கரையின்றி நிற்கின்றது. கொடிய ஆலம் அமுதாகியது கடலின் மீது வட வாமுகாக் கினி நிற்கின்றது அந்தரத்த கிலகோடி தாழாமல் நிலை நிற்கின்றது. சப்த மேகங்களும் வானில் சஞ்சரிக்கின்றன. இராமனடியால் சிலையும் மடமங்கையாகியது. மணி மந்திரம் ஆதியாம் வேண்டு சித்திகள் உலகில் இருக்கின்றன. இதுவே பிரம்ம சக்தி என்றுதாயுமான சுவாமிகள் பரிபூரணானந்தம் என்ற பாடற்பகுதியில் ஒன்பதாவது பாடலிற் கூறியுள்ளார்.

பிரம்மம் என்ற இந்தச் சக்தியானது வாயுவாகவு மின்றி திரவமாகவுமின்றி தெள்ளத்தெளிந்ததாய் விரவி நிற்கிறது. சுத்த வெளி எனப் பெயர் பெறும் இதுவே பரப்பிரம்மமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனத்தால் கணிக்க முடியாத எண்ணிறக்த சிறப்பு ஆற்றல் நிறைந்ததுதான் பேரியக்க மண்டலம். இதில் வானில் உலாவும் கோள்களுமுண்டு உலக உருண்டையின் மீது உலாவும் உயிரினங்களும் உண்டு. இந்தப் பருப்பொருள்களை ஆராய்ந்தபோது தோற்றப் பொருட்கள் எதுவானாலும் அவை விண் துகள்களாலான கூட்டங்களே என்பதாகும். இந்த நுண்ணிய பொருளை ஆகாயம் என்றும் சக்தித் துகள்கள் என்றும் கண்டறிந்தனர் விஞ்ஞானிகள்.

உலகம் உருண்டு கொண்டிருக்கின்றது. அதிலுள்ள நுண் துகள்களையும் அதன் கூட்டங்களையும் ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. மற்றக் கோள்களிலிருந்து குறிப்பிட்ட தொலைவில் விலகி நின்று இயங்குகின்றது. இதனால் உருளுவது, ஈர்ப்பது விலகி நிற்பது என்ற மூன்று இயக்கத் தன்மைகளும் இறைசக்திக்கு இருப்பதால்தான் இது சத்திய சக்தியாகிறது.

பரமாணு என்னும் நுண் அணுவிற்கு ஈர்ப்பும், உருளுதலும், விலகுதலும் எவ்வாறு ஏற்பட்டன? என்று சிந்திக்கும் போதுதான் ஒரு மாற்றமுடியாத உண்மை புலனாகின்றது. விண் துகள்களுக்கு அப்பாலும் சூழ்ந்திருப்பது என்ன? தூய வெளிதான் பரமாணுவும் தூய வெளியும் பேரியக்க மண்டலத்தில் இருக்கிறது. எனவே இறுக்கும், உருளும், தள்ளும் ஆறற்ல்களை நோக்கும் போது இந்த மூன்றும் அழுத்தம் என்னும் ஒரே ஆற்றலின் வேறுபாடுகள்தான் என்றும் உணருகிறோம். (SELF PRO-TECTIVE FORCE) இதுவே அவற்றைக் காக்கின்றது என்பது விஞ்ஞானம். இந்த அழுத்தம் விண் துகள்களைச் சுற்றியுள்ள தூய வெளியிலிருந்துதான் வருகின்றதென்பது மறுக்கமுடியாத உண்மை என விளங்குகின்றது. இதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞானம் எனவே பேரியக்க மண்டலம் எனப்படும் இறை வெளியே எல்லா ஆற்றல்களும் அடங்கியுள்ள பரிபூரணப் பொருள் அதுதான் கடவுள் பரப்பிரம்மம்.

அணுவியல் அறிஞர்கள் அணுபற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைப் பார்ப்போம். ஒரு பொருளை உடைத்துப் பிரித்துக்கொண்டே போனால் இறுதியில் எஞ்சி இருப்பது அணுத்திரன் என்றும். அது அந்தப் பொருளின் மூலக் கூறு என்றும் கூறுகின்றார்கள். இந்த மூலக் கூறை வேதியல் மாற்றத்தின் வழி உடைக்கும் போது மிஞ்சுவதே அணு என்றும் கூறுகின்றார்கள் விஞ்ஞானிகள்.

இவ்வாறு அணுவாகப் பிரிக்கப்படுபவையே பிரபஞ்சத்தின் அடிப்படைப் பொருள். அல்லது கனிமங்கள். இந்தக் கனிமங்கள் தொண்ணூற்றிரண்டு வகை இருப்பதாகவும் அவை ஒவ்வொரு வகைப் பொருளிலும் ஒவ்வொரு வகையாக இருப்பதாயும் இந்தத் தனிமங்கள் தம்மோடு தாமும் பிறவுமாகச் சேர்ந்து அணுத்திரள்களாகின்றனவாம்.

அணுவோ மிகச் சிறிய துகள். அதைக் கண்ணால் கண்டு கொள்ள முடியாது. அரைக்கோடி அணுக்களை அணிவகுத்து நிற்கவைத்தால் ஒரு முற்றுப்புள்ளிக்குற்றுக்குள் அணு அடங்கிவிடுமாம். ஒரு அங்குலத்தை இருபத்தைந்து கோடியாகப் பங்கிட்டால் கிடைக்கும் அளவே ஒரு அணுவின் குறுக்களவாகும் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

அணுவைப் பிளந்து பார்த்தபோது ஒரு அணுவுக்குள் எலக்ரோன், நியூட்டோன், புரட்டோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் அணுவின் உட்பாகங்கள் இருப்பதாயும் அவற்றை ஒரு சக்தி இயக்கிக் கொண்டிருப்பதாயும் விஞ்ஞான மேதை டாக்டர் ஐன்ஸ்டீன் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்தச் சக்தி எது என்பதை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது ரிஷிகளும், முனிவர்களும் 'அருவமே உருவம்' 'எண்ணமே வடிவம்' என்று அற்பதமாகக் கூறியுள்ளார்கள்.

''அருவமும் உருவமாகி அனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப் பிரம்மமாய் நின்ற ஜோதிப்பிளம்பு" என்பது அந்தச் சக்தி. என்று கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் அவர்கள் கூறியுள்ளார். இந்தக் கருத்துக்கு விஞ்ஞானிகள் ஈர்க்கப்பட்டபோது அந்தச் சக்தியை ஆராய முற்பட்ட விஞ்ஞானிகள் 'குவாண்டத்தத்துவம்' 'மகா இழைத் தத்துவம்' பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

நம்மைச் சூழவுள்ள பிரபஞ்சமும் அதைப்பற்றிய நமது எண்ணங்களும் வேறுவேறு என நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால் தற்கால விஞ்ஞான அறிவியலாளர்களால் கண்டறியப்பட்ட இயற்பியல் பொருட்கள் பற்றி நமது எண்ணங்களுக்கும் பிரபஞ்சப் பொருட்களுக்கும் அடிப்படை உறவு இருக்கிறதைக் கண்டறிந்தார்கள்.

இது எப்படியெனின் ஒரு மேசையை பூர்வாங்க மாகப் பார்த்தால் அது அணுக்களின் தொகுப்பாயி ருக்கிறது. இந்த அணுக்கள் பிரபஞ்சம் எங்கும் வியாபித்திருக்கின்றது. அவ்வாறு சிதறியிருக்கும் அணுக்கள் நமது எண்ணத்தின் வலிமையால் அந்த அணுக்கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் பொருளைப்போல மேசை என்றாகிறது என்பதே குவாண்டத் தத்துவம். இந்தத் தத்துவத்தைச் சிந்தித்த விஞ்ஞானிகள் தங்கள் மனத்தால், நுண்உணர்வால், உட்காட்சிப் புலனால்தான் இந்தத் தத்துவத்தை ஆராய்கிறார்கள்.

மகா இழைத் தத்துவத்தை ஒளியிழைத் தத்துவம் என்றும் கூறலாம். பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருட்களும் ஈர்ப்புப்போன்ற ஒரு விசையினால் ஈர்க்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. என்பது தான் இத்தத்துவம். இந்த அற்புதமான நிகழ்வைத்தான் நமது முன்னோர்கள் பூச்சியத்துக்குள் ஒரு இராச்சியம் என அழகாகக் கூறியுள்ளார்கள். நமது கீழைத்தேசத்தில் ஆயிரம்ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஒளியிழைத் தத்துவம்பற்றி வேதாந்திகளும் சித்தாந்திகளும், மெய்ஞானிகளும் இந்த அரூபமான ஒளி இழைகள் பற்றிக் கூறியுள்ளார்கள்.

இந்த முடிவற்ற ஒளியிழைத் திருக்கூத்து அண்டத்திலும் பிண்டத்திலும் நமது உடலிலும் மனத்திலும், இரத்தத்திலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அறிவியல் ரீதியிலிருந்து திரும்பவும் கணிப்பொறிப் புலன்கள் மூலமும் குவாண்டத் தத்துவம், மகா இழைத் தத்துவம் என்ற தத்துவ ரீதியில் ஆராய்ந்து பார்க்கப்பட்டன.

அதாவது படைப்பெல்லாம் ஒரு பெரிய எண்ணமே என்ற நிலைக்கு விஞ்ஞானம் வந்து கொண்டிருக்கிறது, என்பதைக் காணும் போது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எண்ணமே வடிவம் என்று கூறியிருக்கும் மகரிஷிகளின் சிந்தனைத் திறனை நாம் போற்றாமல் இருக்கமுடியாது. இந்த எண்ணமே வடிவம் என்ற தத்துவத்தைத்தான் ஆத்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானிகள் 'ஈஸ்வர சங்கற்பம்' என்று கூறியிருக்கின்றார்கள்.

அணுவினுடைய விஸ்வரூபமாக விரிந்து பரந்து இருக்கும் இப்பிரபஞ்சத்தைப் பற்றி பிரம்மஞானி ஸ்ரீ கெங்காதரானந்த அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

எண்ணரிய தாவர சங்கமங்களை தன்னகத் தமர்த்தி நன்மை-தீமை, இருள்-ஒளி, குளிர்-வெப்பம் என்ற இருவினைகளாய் அமைந்தது இப்பிரபஞ்சம். புலனறிவுக்கு அப்பாற்பட்ட நுண் சக்தி பலவற்றால் சூழப்பட்டு அந்தரத்தகிலகோடி தாழாமல் நிலை நிற்கும் கோள்களைக் கொண்ட விண் உலகத்தையும், எண்ணரிய சராசரங் களையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் விண்வெளியையும் இணைத்து நிறுத்தி இயங்கி வரும் சக்தியே சைதன்னிய சக்தி என்று கூறப்படுகிறது.

இந்தப் பிரபஞ்சம் எப்படி உண்டாயிற்று? அண்ட பிண்டங்கள் எப்படி உண்டாயின? நமது உயிர் இயங்கும் இந்தச் சிறு பிண்டத்தைப் பற்றியே ஞான சூனியமாயி ருக்கையில் அநாதியாயும், அளவற்றதாயும் இருக்கின்ற அகண்டாகார உற்பத்தியைப் பற்றித் தெரிந்து கொள்வது எங்ஙனம்?

பகுத்தறிவுக்கும் நுண் அறிவுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் மர்மங்கள் பற்றி விஞ்ஞானிகள் கூறும் விளக்கம் ஒருபுறம் இருக்க மெய் ஞானிகள் கூறும் விளக்கத்தைப் பார்ப்போம்.

ஆகாய வெளியில் புலனாகும் சூரிய சந்திரர்களும் ஏனைய கிரக கோள்களும், பஞ்ச பூதங்களும் ஓசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிகளும் நிலை தவறி ஒருகணம் இயங்கினால் வரும் விபரீத பலன்கள் என்ன என்பதை நம்மால் சிந்திக்க முடியுமா? எல்லாம் ஏதோவொரு சக்தியின் ஆணைக்குட் பட்டு இயங்குவதற்கு இன்னொரு சத்தியப் பொருள் இருக்க வேண்டும்.

''ஏகச்சா சர்வ பூதாந்தராத்மா
ரூபா ரூபப் பீரதி ரூபா வீகச்சா''

என்று சிருஷ்டி தத்துவத்தைப்பற்றி வேதம் சுருக்கமாகக் கூறியிருக்கின்றது. ஒரு பொருள் (பரப்பிரம்மம்) பலவாறாகத் தோற்றப்படுகிறது என்பதே இதன் பொருள். தற்கால விஞ்ஞானிகளின் முடிவுகளும் இத்தத்துவத்தை ஏற்கும் விதத்தில் இருப்பதை கவனிக்கமுடிகிறது. அதாவது அணுவானது விதவிதமான ரூபங்களாகி பிரபஞ்சமாக விரிந்து நிற்கின்றது என்பதே விஞ்ஞான தத்துவம்.

பிரபஞ்சமாக விரிந்து பரந்து நிற்கும் சத்தியப் பொருளை மெய்ஞானிகள் பரமசிவம் என்றார்கள்.

''ஒன்றாயும் பலவாயும் உருவாயும் அருவாயும்
குன்றா அணுவாயும் குணமாயும் குணியாயும்
நன்றாயும் தீதாயும் நானாயும் தானாயும்
இன்றா முளதாயும் இருக்குமிந்தப் பரமசிவம்''

என்று பரமசிவத்தின் வியாபகம் பற்றிக் கூறப்படுகிறது. இங்ஙனமிருக்கும் பரமசிவனில் நின்றும் முதன்முதலாக பஞ்சீகரணம் செய்யப்படாத பஞ்சபூத தன்மாத்திரைகள் தோன்றின. பரமாத்மாவின் சலனமாகிய மூலப் பிரகிருதியின் விசேஷ சலன சக்தியால் ஆதிபத மாகிய ஆகாயதத்துவம் உண்டாயிற்று. இறைவனின் இச்சை என்றும், எண்ணமென்றும் ஆகர்ஷணம் என்றும், பிராணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பலவாறாகக் கூறப்படும் மகா சக்தியினால் ஆகாயத்தில் சலனமுண்டாக அந்தச் சலன விசேஷத்தால் எண்ணிறந்த அண்டங்கள் உருவெடுக் கின்றன.

ஆகாயத்தினின்று வாயு, வாயுவிலிருந்து அக்கினி, அக்கினியினின்று நீரும், நீரினின்று பிருதிவியும் ஆகிய பஞ்ச பூதங்கள் தோன்றுகின்றன. ஆகாயத்திற்கு சப்தம் ஒருகுணம், வாயுவுக்கு சப்தம், ஸ்பரிசம் என்று இரண்டுகுணம். அக்கினிக்கு சப்தம், ஸ்பரிசம் ,ரூபம் என்று மூன்றுகுணம். நீருக்கு சப்தம், ஸ்பரிசம் ,ரூபம், ரசம் என்று நான்குகுணம். பூமிக்கு இந்த நான்கு குணங்களுடன் கந்தம் என்ற குணமும் சேர்ந்து ஐந்து குணங்களாக அமைகின்றன.

இவைகளே பஞ்சபூத தன்மாத்திரைகள் என்று சொல்லப்படும். பஞ்சபூத தன்மாத்திரைகள் பீஜரூபமாய் அதிசூக்கும நிலையில் இருக்கும். சைதன்னிய சக்தியால் அவை பஞ்சீகரணம் செய்யப்படும்போது எண்ணிலடங்காத சூரிய சந்திரர்களும் பூமிபோன்ற பற்பல அண்டங்களும் விலங்குகளும் மனிதர்களும் தோற்றம் பெறுகின்றன.

"ஐந்துபூதமும் பத்தாக்கி அவைபாதி நன்நான்காக்கி
நந்து தம்பாதி விட்டு நான்கொடு நான்குங் கூட்ட
வந்தன தூலபூத மகாபூத மிவற்றி நின்றும்
தந்தன நான்காகதூல தனுவண்ட புவன போகம்"

(கைவல்ய நவநீதம் 41)

ஆகாயம் முதலிய சூக்கும பூதங்கள் நின்று ஒவ் வொன்றை இரண்டிரண்டு பாகஞ்செய்ய அவை பத்தாகும். அதினின்று ஐந்து அரையரைப் பாத்தை உள்ளபடி நிற்கவிட்டு மற்ற ஐந்து பாகங்களினின்றும் ஒவ்வொன்றும் நன்நான்காக்கப்பட்டு அந்த நன்நான்கு பாகத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி வைக்கப்பட்ட தத்துவம் அரை அரைப்பாகத்தை விட்டு மற்றப் பூதங்களில் நான்கு அரை அரைப்பாங்களில் சேர்க்கப்படும்போது ஒவ்வொரு பூதங்களும் ஐந்தைந்து விதமாகப் பருணமிக்கின்றன. இதுவே பஞ்சீகரணம் எனப்படும் என்று கைவல்ய நவநீதம் விளக்குகின்றது. பஞ்சபூத தன்மாத்திரைகளினின்றும் பஞ்சீகரணம் செய்து வரும் தூலத்தில் இயற்கையி னின்றும் உதித்த முக்குணங்கள் சேர்க்கப்படும் பொழுது அந்த முக்குணங்களும் விகிதாசாரத்தின்படி பலதரப்பட்ட உருவங்கள் தோன்றலாயிற்று. விஞ்ஞானிகள் குவாண்டத் தத்துவங்களை ஆராயமுற்பட்டபோது அணுக்களால் பலவகைத் தோற்றங்கள் உருவாவதைக் கண்டறிந் தார்கள்.

மெய்ஞானிகள் கூறுவதாவது ஆகாயத்தை இருகூறுகளாகப் பிரித்தால் ஒருபகுதி சமஷ்டி என்றும் மற்றப்பகுதி வியஷ்டி என்றும் கூறலாம். சமஷ்டி என்பது ஈஸ்வரனுடைய உபாதி என்றும் வியஷ்டி என்பது ஜீவர்களுடைய உபாதி என்றும் சொல்லப்படும். இந்த வியஷ்டி பாகத்தை நான்கு பாகங்களாக்கி ஒவ்வொரு பாகமும் தனித்தனியே வாயுவுடன் சேரும்பொழுது புத்தியும், நீருடன் சேரும்பொழுது சித்தமும் பிருதிவியுடன் சேரும்பொழுது அகங்காரமும் உண்டாகின்றன. இவைகள் அந்தக்கரணம் என்று சொல்லப்படும்.

இவ்வண்ணம் பஞ்சீகரணம் செய்யப்பட்ட பூதஉடலுக்கு ஐந்து கன்மேந்திரியங்களும் ஐந்து ஞானேந்திரியங்களும், பிராணனும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற இவைகள் சேர்ந்ததே மனித சரீரம் எனப்பட்டது. இவ்வாறு மனித சரீரம் எடுத்த மகரிஷிகள் தமது ஞானக் கண்ணால் கண்டறிந்த பிரபஞ்ச மர்மத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள் தமது ஊனக் கண்களால் நுண்ணாடிகள் போன்றவற்றின் உதவியுடன் அணுவையும் அண்டத்தையும் ஆராய்ந்து கண்டறிந்த விஞ்ஞானப் புதுமைகளே இன்று மனிதகுலத்துக்கு பெரிதும் பயன்பட்டு வருகின்றன.

விஞ்ஞானிகளின் கூற்றின்படி நாம் காணும் பூமண்டலமும் அண்டவெளியில் காணப்படும் கோள்களும் அணுவின் விஸ்வரூபங்கள். இந்த அணுவின் ஆற்றலைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் கண்டுபிடித்த விஞ்ஞானப் புதுமைகள் அனைத்தும் அணு விஸ்வரூபங்களே.

தொலைக்காட்சிப் பெட்டிகள் றேடியோ வகைகள், கணனி வகைகள், மோட்டார்வாகன வகைகள், ஜெற்விமானங்கள், தொலைபேசிகள், தொலைபேசிச் செய்மதிகள், ஏவுகணைகள், மின்அஞ்சல், இணையங்கள், தொலைநகல், சலவைஇயந்திரங்கள், மின்குமிழ்கள், ஒலிபெருக்கிகள், கிறைண்டர், மிக்சி, மைக்றோபோன், படப்பிடிப்புக் கருவிகள் இவைபோன்ற அற்புதப்படைப்புக் கருவிகளெல்லாம் அணுவின் விஸ்வரூபங்களே.

அணு ஆராய்ச்சியின்படி மனிதர்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன என்பனவும், மரம்செடி, கொடிவகைகளும் மலைகள், கடல்கள், ஆறுகள், குளங்கள் போன்றவையும் அணுவின் விஸ்வரூபங்களே. பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்தும் அணுவின் விஸ்வரூபங்களேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

விஸ்வரூப தரிசனத்தைப்பற்றி எழுதும் போது ஒவ்வொரு தனி மனிதனிடத்திலும் விஸ்வரூபம் கிளர்ந்தெழுகின்றதே என்ற எண்ணம் மனதில் உதித்தது. இந்த எண்ணத்தை ஒரு அன்பரிடம் பகிர்ந்து கொண்ட போது அவர் சிரித்துக் கொண்டே இதற்குத்தான் பஞ்சமில் லையே. கோடானு கோடி எடுத்துக்காட்டுக்கள் உலகில் இருக்கின்றனவே என்றார்.

இக்கருத்தை உள்வாங்கிக் கொண்டு மனித விஸ்வரூபத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். அதற்காக ஆண்களும் பெண்களுமான சுமார் பதினைந்து பேரைத் தனித்தனியே சந்தித்து செவ்வி கண்டேன்.

அவர்களிடம் நான் ஒரேயொரு கேள்வியைத் தான் கேட்டேன். '' உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் பொறுமை இழக்க நேரிட்ட ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்து உங்கள் மனக் கிளர்ச்சியின் விஸ்வரூபத்தைக் கூறுவீர்களா?

இதற்கு எவருமே ஒரு பதிலும் தரவில்லை. நீண்ட நேரம் யோசித்தபின் மௌனமாக இருந்துவிட்டு சிரித்து விட்டு வார்த்தைகளை நலிய விட்டார்கள். அவர்களுடைய மனதைச் சோதித்துச் சேதித்து விட்டேனே என்று வருத்தப்பட்டேன்.

உண்மையைதான் தெய்வ விக்கிரகங்களின் வடிவத்திலே உக்கிர ரூபத்தையோ வக்கிர ரூபத்தை யோ சிற்பி காட்டுவதில்லை. அழகிய அருள்வடிவத்தையே காட்டுவார். மனிதர்கள் தம்மிடம் கிளர்த்தெழும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம் முதலிய (மிருக சுபாவங்களை வெளிப்படுத்திக் காட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புவதில்லை. அன்பு, கருணை, இரக்கம், தயை அமைதி அடக்கம், திருப்தி, சாந்தி, சமாதானம், நல்லொழுக்கம் முதலிய உத்தமமான தெய்வீகக் குணங்களை வெளிக்காட்டவே விரும்புவார்கள். முன்னயது அகௌரவமானது பின்னையது கௌரவ மானது. எனவேதான் என்னால் செவ்வி காணப்பட்டவர்கள் சிரித்து விட்டு வார்த்தைகளைத் தேயவிட்டார்கள் போலும்.

இன்றைய உலகில் கொலை, களவு, கொள்ளை, கற்பழிப்புப் போன்ற பயங்கரமான உணர்வுகள் தலைதூக்கி அநேக அனர்த்தங்கள் நிகழ்வதை அன்றாடம் பத்திரிகைகளில் படிக்கிறோம். தனி மனிதனிடத்திலும் சமுதாயத்திலும் இது நிகழ்கின்றது. ஏன் இந்த அவலநிலை? இது மனிதனிடமுள்ள மிருக உணர்வின் வெளிப்பாடுபோலும்

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்துவிடும்.'

என்பது திருவள்ளுவப் பெருந்தகையின் திவ்ய வாக்கு அதனைப் பின்தள்ளி விட்டு சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப மனிதன் பொறுமையை இழந்து தன்னைத்தான் சுதாகரித்து கொண்டு மற்றொருவருக்கு கேடு சூழ்கின்றான். அதனால் அவனது உள்ளார்ந்த வாழ்க்கையில் இருள் சூழ்கிறது.

'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்.'

வள்ளுவர் கூற்று.

சினமென்னும் நெருப்பு மனிதனிடமுள்ள மிருக உணர்வின் வெளிப்பாடாகும். சினம் பொங்கி எழும் பொழுது மனிதன் மிருகமாகின்றான். மனிதன் மிருகமல்ல. அவன் எந்நேரமும் மிருகமாக இருப்பதுமில்லை. மிருக உணர்வும், மிருகத்தனமும் தற்காலிகமாகவே மனிதனிடம் வந்தமைகிறது. அந்தச் சொற்ப நேரத்திற்குள் மனிதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பை இழந்து விடுகின்றான். அவனுடைய செயற்பாடுகள் கட்டுப்பாட்டைக் கடந்து மிருக விஸ்வரூபம் எடுக்கின்றது. நெருப்பானது தன்னைச் சேர்ந்த ஏனைய பொருட்களையும் எரித்து விடுவதுபோல சினங்கொண்ட மனிதனுடைய செயற்பாடுகள் தன்னைச் சேர்ந்தவர்கள் மீது சீறி எழுகின்றது. அதனால் கொலை, வீட்டுக்குத் தீவைத்தல் முதலிய செயல்கள் நிகழ்வதை நாம் அறிகிறோம்.

''உள்ளங் கவர்தெழுந்து ஓங்க சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க''

என்றார் சிவப்பிரகாசர்.

''குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது''

என்றார் வள்ளுவர்.

மனிதப் பண்புகளை - மனித விழுமியங்களை வாழ்க்கையில் மேற்கொள்ள மறுப்பவர்கள், மறப்பவர்கள் யாவரும் மனிதாபிமானமற்ற மிருகங்களுக்கு ஒப்பானவர்கள். மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்னை அறிய வேண்டும். தன்னுள்ளே காணப்படுகின்ற தெய்வீக ஆற்றலை உணர்தல் வேண்டும். மனிதனிடம் ஆற்றல்கள் நிறைய உள்ளன. அவை அவனிடம் உள்ளார்ந்த நிலையில் அடங்கிக் கிடக்கின்றன. அவை மனித சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும். ஆன்மீக உணர்வு இதயத்திலே பிரகாசிக்க வேண்டும்.

ஆன்மீக ஒருமைப்பாடு என்று பெரிதாகப் பேசிக் கொள்ளும் மனித சமுதாயம் இன்று வன்மீக ஒருமைப் பாட்டுக்குள் இரண்டறக் கலந்துவிட்டதுபோலத் தோன்றுகின்றது. சாதி, இன, மத, மொழி, பிராந்திய வேறுபாடுகள் யாவற்றையுங் கடந்து உலகளாவிய ரீதியில் வன்செயல்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆன்மீகத்துக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று திருமூலர் திருமந்திரத்தில் கூறியுள்ள ஆன்மீக ஒருமைப்பாட்டுக்கு வன்செயல்கள் பெரிதும் தடையாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதர்களிடையே அவ்வப்போது ஏற்படுகின்ற முரண்பாடுகள் பிரச்சினைகள் ஆகியவற்றுக்கு சமாதான முறையில் தீர்வு காணாமல் மனிதர்கள் தத்தளிக்கிறார்கள். அதே வேளை வன்செயல் மூலம் தீர்வுகாணவும் விளைகிறார்கள். எனவே மனிதர்கள் ஆன்மீகத்தின்பால் நம்பிக்கை வைத்து உள்ளத்தினுள்ளே ஆன்மீகப் பண்புகளை வளர்த்து அவற்றை வாழ்க்கை யிலே வெளிப்படுத்தி வாழ்தல் மூலம் ஊழல்கள், வன்செயல்கள், துர்நடத்தைகள் என்பவற்றைப் பூண்டோடு அழிக்க முடியும் என்ற சிந்தனையினால் மனித விஸ்வரூபம் பற்றியும் எழுதியுள்ளேன்.

ஒரு நாளில் இருபத்து மூன்றுமணிநேரம் விஷ யாதிகளை அனுபவிக்க விரும்புபவர்கள், ஒருமணி நேரமாவது வழிபாட்டுக்கு செலவழிக்கிறார்களா? இறைவனுடைய மகிமையைக் கூறும் நூல்களைப் படிக்கிறார்களா? மக்கள் சேவை மகேஸ்வர வழிபாடு என்று நினைத்து மக்கள்மீது இரங்கி அவர்களுக்குச் சேவை செய்கிறார்களா? பேராசை எனும் பிணியில் பிணிபட்டு சுயநலமியாக வாழும் மனிதர்களிடம் ஆன்மீகம் வளருமா? மனிதப் பண்புகள், மனித விழுமியங்கள், மனித மேம்பாடுகள் என்பவற்றை உள்ளார்ந்த நிலையில் அனுசரிக்கும்போது அங்கு ஆன்மீகம் மிளிர்கிறது. ஆன்மீகவாதி தத்தமது சமய நெறியில் வழுவாது வாழக் கடமைப்பட்டவன். சமயம் என்பது ஒரு பாதை, ஒரு போதை, ஒரு போர்வை இதனை உணர்ந்து மனிதன் சுயநல வேட்கையை ஒழித்துப் பரநல வாழ்க்கையில் வாழவேண்டும் அப்போதுதான் மனிதன் மனிதனாக வாழ முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியர் பற்றிய
## சில குறிப்புகள்.



சைவப்புலவர். பண்டிதர் திரு.இ.வடிவேல் ஐயா அவர்கள் நாடறிந்த சைவப் பெரியார். தமிழ் சைவம் இரண்டையும் இரு கண்களாகக் கொண்டவர். இப்போதும் சிவபூசை வழிபாடு செய்து வாழ்பவர். கலாபூஷணம், ஞான சிரோண்மணி முதலிய விருதுகள் பெற்றுக் கௌரவிக்கப்பட்டவர் அவர்.

1. திருக்கோணமலை மாவட்டத் திருத்தலங்கள்,
2. திருக்கோ ணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்,
3. திருக்கோணேஸ்வரம்தான் தெட்சண கயிலாயம்,
4. கோணேசர்கல்வெட்டு,
5. கோணேசர் கோவில் வரலாறு,
6. சண்முகா சரணம்,
7. திருமுறைப் பண்ணிசைத் திறனாய்வு,
8. சுவாமி விவேகானந்தரின் ஞானக்குரல்,
9. கோணமலை அந்தாதி,
10. வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

என்னும் பத்து நூல்களை எழுதி வெளியிட்டவர்.

விஸ்வரூபதரிசனம் என்னும் இச்சிறு நூலை வெளியிடத் திருவருள் கூட்டிவைக்கும் இவ்வேளையில் அவர் படைத்த

1. சித்த சோதனைச் சிந்தனைகள்,
2. திருக்கரைசப் பராண உரை,
3. மாணிக்கவாசகரும் விவேகானந்தரும்

என்னும் நூல்களும் வெளியிட இருக்கின்றன.

ஆன்மீக நூல்களை ஆய்வு செய்வதும், திருமுறைப் பாராயணத் தொண்டு செய்வதும், திருக்கோணேஸ்வர வரலாறுகளைத் தொகுத்து மக்களுக்கு வழங்கும் எழுத்துப் பணி புரிவதுமாக வாழ்ந்து வருகிறார்.

இறைபணிச் செம்மல்
பொ. கந்தையா
(காந்தி ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org